# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 07.06.2022 | supeedsam.com | supeedsam@gmail.com







## வெள்ளை வானுக்கு பதிலாக மோட்டார் சைக்கிள் பயன்படுத்தி

# துப்பாக்கிச் சூடுகள்

கடந்த காலங்களில் வெள்ளை வான்களை பயன்படுத்தி செய்யப்பட்ட கொலைகள் தற்பொழுது மோட்டார் சைக்கிள்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றனவா என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார்.

திடீர் திடீரென மக்கள் கொலை செய்யப்படும் பயங்கரமான சம்பவங்கள் பதிவாகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார். வீதியில் இருக்கும் மக்கள் மீது திடீரென துப்பாக்கிச் சூடு நடாத்தப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

நடுப் பகலில் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படுவதாகவும் இதுவா ராஜபக்ச ஜனாதிபதி உறுதியளித்த தேசியப் பாதுகாப்பு என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இவ்வாறு உயிரிழந்த சிலர் முக்கியமான வழக்குகளின் அரச சாட்சியாளர்கள் என கேள்விபட்டதாக அவர் தெரிவித்துள்ளார். பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களின் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் சாட்சியாளர்களே இவ்வாறு படுகொலை செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

தேசியப் பாதுகாப்பினை உறுதி செய்வதாக உறுதியளித்து ஆட்சி பீடம் ஏறிய அரசாங்கம் இன்று தேசிய பாதுகாப்பினை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது என சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.



## முகத்துவாரத்தில் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் பலி



கொழும்பு-15 முகத்துவாரம் பகுதியில் நேற்று (06) மாலை 5 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பில், பொலிஸ் திணைக்களம் ஊடக அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

முகத்துவாரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரெபாணா வத்தை முன்பக்கமாக, முச்சக்கரவண்டியில் வந்த இனந் தெரியாத இருவரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயரிழந்தார்.

உயிரிழந்த 24 வயதான நபர், கொழும்பு-15, அளுத்மாவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவர் ஆவார்.

போதைப்பொருள் அல்லது வேறு வர்த்தகத்தால் ஏற்பட்ட

02 ஆம் பக்கத்தில்...

## பிரசன்ன ரணதுங்கவுக்கு ௨ வருட கடூழிய சிறைத்தண்டனை விதிப்பு



மீதொட்டமுல்ல காணி வழக்கில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் திகதி முதல் 2015 ஆம் ஆண்டு

02 ஆம் பக்கத்தில்...

## 'பணயக் கைதியாக புதிய பிரதமர் ரணில்'

ஜனாதிபதி, இந்த இக்கட்டான காலச் சூழலைத் தாண்டுவதற்கு புதிய பிரதமரை பணயக் கைதியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பாங்கில் செயற்படுகின்ற அரசியல் நடவடிக்கையையே தற்பொழுது காண்கின்றோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

19ஆவது திருத்தத்தின் உண்மையான உள்ளடக்கங்களை தங்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து இன்னும் ஆட்சியில் நீடித்து



02 ஆம் பக்கத்தில்...

## ஜோன்ஸ்டனை தேடி பல போலிஸ் குழுக்கள்



முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவைக் கண்டுபிடிப்பதற்காக பல பொலிஸ் குழுக்கள் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா தெரிவித்தார்.

பல குழுக்கள் அனுப்பப்பட்ட போதிலும் மே 9ஆம் திகதி அலரிமாளிகை

02 ஆம் பக்கத்தில்...

## ஈழத் தமிழர்களின் கோரிக்கையை நிறைவேற்ற தமிழக முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்



தமிழகத்தின் சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களின் கோரிக்கையை நிறைவேற்ற தமிழக முதலமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு இது தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், தமிழகத்தின் சிறப்பு முகாம்களில்

02 ஆம் பக்கத்தில்...











## ௨0 சாபக்கேடு - நாட்டுக்காக ௨1 ஐ ஆதரிக்கவும்



அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டம் தான் இந்த நாட்டுக்கு பெரும் சாபக்கேடாக அமைந்தது. எனவே, ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி, பாராளுமன்றத்துக்கு அதிகாரங்களை பகிரும் 21 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நாம் ஆதரிப்போம் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற எம்.பியுமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று (06) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு;

02 ஆம் பக்கத்தில்...

# மட்டக்களப்பு மக்கள் நலன்நோக்கி மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றிய பிரதிநிதிகள் எட்டு கோரிக்கைகள் முன்வைப்பு

( வாஸ் கூஞ்ஞ)

மட்டக்களப்பு மக்கள் நலன்நோக்கி மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றிய பிரதிநிதிகளுக்கும் மட்டக்களப்பு அரச அதிபருக்குமான சந்திப்பு ஒன்று இடம்பெற்றபோது எட்டு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றிய பிரதிநிதிகளுக்கும் மட்டக்களப்பு அரச அதிபருக்குமான சந்திப்பு ஒன்று மாவட்ட செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (03) மாலை இடம்பெற்றது.

அரசாங்க அதிபர் கருனாகரன் தலைமையில் நடைபெற்ற இவ் சந்திப்பில் மேலதிக அரசாங்க அதிபர் குதர்சனி ஸ்ரீகாந்த், உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட கரீட்டாஸ் எகெட் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்பணி எ.யேசுதாசன் அடிகளார், உட்பட சர்வமத சார்பில் சர்வமத ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ வீ.கே.சிவபாலன் குருக்கள், மட்டக்களப்பு மாவட்ட சர்வமத ஒன்றியத்தின் செயலாளர் அருட்பணி கே.ஜெகதாஸ், சர்வமத ஒன்றியத்தின் உப தலைவர் மௌலவி சாஜஹான் மற்றும் சர்வமத ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் இவ் சந்திப்பில் கலந்து கொண்டனர்.



இவ் சந்திப்பில் மட்டக்களப்பு பகுதியில் இவ் இடறலான காலக்கட்டத்தில் மட்டக்களப்பு மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சனைகளுக்கு எவ்வாறு அரச அதிபர் சுமூகமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் எட்டு கோரிக்கைகளை மட்டக்களப்பு மக்கள் சார்பாக இவ் குழுவினர் அரச அதிபரிடம் முன்வைத்தனர்.

மட்டக்களப்பு பகுதியில் விநியோகிக்கப்படும் அத்தியாவசிய பொருட்களை ஒரு பொறிமுறைக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் சகல மக்களுக்கும் கிடைக்கக்கூடியதாக அமைய வேண்டும்.

நாளுக்கு நாள் இங்கு தான்தோன்றித் தனமாக பொருட்களின் விலையேற்றங்கள் ஏற்படுவதால் வறுமை கோட்டுக்குள் வாழும் மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுப்பதால் அனைத்து வர்த்தக நிலையங்களிலும் நிர்ணயிக்கப்பட்ட விலை காணப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் உணவு பஞ்சம் ஏற்படும் என்ற எதிர்வு கூறப்பட்டுள்ளதால் இவ் மாவட்டத்திலுள்ள நெல் இங்கு களஞ்சியப்படுத்தப்படுத்தி நெருக்கடி காலத்தில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ் மக்கள் போஷாக்கு தன்மையில் இருப்பதற்கு மட்டக்களப்பில் போதிய பால் உற்பத்தி இருப்தால் இங்கு உற்பத்தி செய்யப்படும் பால் வெளி மாவட்டங்களுக்கு அனுப்புவதை குறைத்து இவ் மக்கள் தன்னிறைவு காண்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்

மட்டக்களப்பில் கூட்டுறவு சங்க விற்பனை நிலையத்தை மீண்டும் புத்துயிர் பெறச் செய்து கிராமபுற மக்கள் நியாயமான விலைக்கு பொருட்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேலும் ஒவ்வொரு வீடுகளிலும் வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிக்க வேண்டும் என இவ் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பான விடயங்களை சார்ந்த நிறுவனங்களை அழைத்து இவற்றை முன்னெடுக்கும் நோக்குடன் எதிர்வரும் புதன்கிழமை ((08.06.2022) கலந்துரையாடுவது என இவ் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.



**வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாளின் வைகாசி திருக்குளிர்த்தி சடங்கு திருக்கதவு திறத்தலுடன் நேற்று 6 ஆம் திகதி ஆரம்பமாகியது.**

**( வி.ரி.சகாதேவராஜா)**

## 'பணயக் கைதியாக புதிய பிரதமர் ரணில்'

கொள்வதற்கான கபடத்தனமான இந்த ஆட்சிக்குப் புதிய பிரதமரும் இணங்கிப் போவாராக இருந்தால் அவரது நிலைமையும் விபரீதமானதாக ஆகிவிடும் என்றும் எச்சரித்தார்.

நாகவில்லு (எருக்கலம்பிட்டி) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவும், இளைஞர் காங்கிரஸூம் இணைந்து, புத்தளம் பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (05), நடாத்திய கட்சியின் விசேட ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, அடிப்படைத் தேவைகள் பற்றிய விடயங்களில் கூட இன்னும் சரியான முடிவில்லாமல், நீண்ட வரிசைகளில் மக்கள் மணிக்கணக்கில் காத்திருக்கும் நிலவரம் குறித்து மிகவும் கவலையாக இருக்கிறது.

அதே நேரம் உணவு பஞ்சம் ஏற்படப் போகின்றது என்று அரசாங்க மேல் மட்டுமே அடிக்கடி சொல்கின்ற போது மக்கள் பீதியடைந்து அநேகர் இந்த நாட்டை விட்டே வெளியேறுகின்ற நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது.

இப்படி மக்களைப் பீதியில் வைத்து கொள்வதை விட்டுவிட்டு, இருக்கின்ற பதட்டத்தைத் தணிப்பதற்கும், அதேவேளை ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அரசாங்கம் முன் வர வேண்டும்.

வெளிநாடுகளில் இருந்து வருகின்ற உதவிகளை பெறுவதில் அரசாங்கம் காட்டுகின்ற ஆர்வத்தைப் போன்றே, இந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருகின்ற அவலங்களையும், கஷ்ட நிலைமைகளையும் தீர்த்து வைப்பதற்கும் முயற்சிக்க வேண்டும்.

நிலைமையை மிகப் பக்குவமாக கையாள்வதை விடுத்து, என்னைப் பொறுத்த மட்டில் ஆட்சிக்கு வந்துவிட்டதாகச் சொல்லி கொண்டிருக்கின்ற புதிய பிரதமர், ஆளுகின்ற பொது ஜன பெரமுன கட்சியின் பணய கைதியாக இருந்துகொண்டு எவ்வளவு தூரம் இதனைச் சாதித்து முடித்துவிட முடியும் என்ற பெரிய கேள்வி என்னில் எழுகின்றது.

எனவேதான், எதிர் கட்சியினராகிய நாங்கள் மிக அவதானமாக எங்களால் முடிந்த அளவு நாங்கள் நாட்டை காப்பாற்ற வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் விடயங்களை அணுகுகின்றோம்.

அதே வேளை, வெறும் சொந்த சுய லாபங்களுக்காக ராஜபக்ஷ குடும்பத்தினரைக் காப்பாற்ற எடுக்கப்படுகின்ற அரசியல் நடவடிக்கைகளைப்பற்றி மிகவும் அவதானமாக இருக்கின்றோம்.

நாட்டு மக்களின் ஒருமித்த கோரிக்கையான ராஜபக்ஷ குடும்பத்தினர் ஆட்சியில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு முதன்மை அளிக்கின்ற வகையில் செயற்பாடுகள் அமைய வேண்டும். குறைந்த பட்சக் காலக்கெடுவையாவது விதிக்கவேண்டும். எந்தக் காலக்கெடுவும் இல்லாமல் எந்த ஜனாதிபதி பதவியில் நீடிக்கின்றாரோ, அந்த ஜனாதிபதி சரியான கால அட்டவணை இல்லாமல் எப்படியாவது இந்த இக்கட்டான காலச் சூழலைத் தாண்டுவதற்கு புதிய பிரதமரை பணயக் கைதியாகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பாங்கில் செயல் படுகின்ற அரசியல் நடவடிக்கையையே தற்பொழுது காண்கின்றோம்.

இதே வேளை அரசியலமைப்பின் 20ஆவது சீர் திருத்தம் மாற்றியமைக்குமாறு கூறி பல கட்சிகள் முன் வந்திருக்கின்றன.

20வது சீர்திருத்தத்தை மாற்றியமைப்பதாக ஜனாதிபதியே உத்தரவாதம் வழங்கி இருக்கின்றார். அப்படி உத்தரவாதம் வழங்கிய பின்பும் கொடுத்த வாக்குறுதியை மீறி, தனிப்பட்ட நபர்களின் தேவைகளுக்காக அரசியல் அமைப்பு சட்டத்தில் உரிய மாற்றங்களை கொண்டு வருவதை விடுத்து, 19ஆவது சீர்திருத்தின் உண்மையான உள்ளடக்கங்களை தங்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து இன்னும் ஆட்சியில் நீடித்து கொள்வதற்கான கபடத்தனமான ஆட்சிக்கு இந்தப் புதிய பிரதமர் இணங்கிப் போவாராக இருந்தால் அவரது நிலைமையும் விபரீதமானதாக ஆகிவிடும் என்றார்.




## முகத்துவாரத்தில் துப்பாக்கிச் சூடு

தனிப்பட்ட முரண்பாட்டினால், இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மரணமடைந்த நபர், போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்தவர். பின்னர் பிணையில் விடுக்கப்பட்டிருந்த நபராவார். மரணமடைந்தவரின் பூதவுடல், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முகவத்துவாரம் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.

## 20 சாபக்கேடு - நாட்டுக்காக 21 ஐ

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி இன்று உச்சகட்டத்தில் உள்ளது. இந்நிலைமைக்கு ராஜபக்ச தரப்பே பொறுப்புக்கூற வேண்டும். ராஜபக்ச ஆட்சியில் எடுக்கப்பட்ட தவறான முடிவுகளால் தான் நாட்டு பொருளாதாரம் சீரழிந்துள்ளது. எரிபொருள் பிரச்சினைக்கு இன்னும் தீர்வில்லை. புதிய அரசு அமைந்த பிறகும்கூட வரிசைகள் தொடர்கின்றன.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. அதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி முழு ஆதரவையும் வழங்கும். எனினும், 21 ஆவது திருத்தச்சட்டமூலம் நிறைவேறுவது மொட்டு கட்சியின் கைகளில்தான் தங்கியுள்ளது. ஏனெனில் அக்கட்சிக்குதான் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் உள்ளது. 21 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேறினால் தான் நாட்டில் ஜனநாயகம் மலரும். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். 19ஐ இல்லாதொழித்து 20 ஐ கொண்டு வந்தால் தான் நாட்டுக்கு சாபம் ஏற்பட்டது.

அதேவேளை, தமிழகத்தால் வழங்கப்பட்ட நிவாரணத்தில் அரசியல் நாடகம் அரங்கேற்றப்படக்கூடாது. மக்களுக்கு நியாயமான முறையில் பங்கிடப்பட வேண்டும்.

சஜித் பிரேமதாச பிரதமர் ஆகி இருந்தால்கூட நான் அமைச்சு பதவியை ஏற்றிருக்கமாட்டேன். மக்கள் ஆணையுடன் அமையும் அரசியல்தான் அமைச்சு பதவியை ஏற்பேன். அதுவும் எமது மக்களுக்கு சேவை செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.

தோட்டப்பகுதிகளில் உள்ள தரிசு நிலங்கள் எமது மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் மலையக மக்களுக்கும் நிவாரணம் அவசியம். அதற்கான வலியுறுத்தல் தொடரும் என்றார்.

## ஈழத் தமிழர்களின் கோரிக்கையை

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்கள் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருந்து வரும் உடல்நிலை மிகவும் மிகவும் மோசமடைந்துள்ளது.

இந்நிலையில்அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் இதுவரையில் நிறைவேற்றப்படாதமை உண்மையில் ஏமாற்றத்தையும் மனவேதனையும் தருகின்றது.

இதனை கருத்திற்க் கொண்டு அவர்களை விடுவிப்பதற்கு தமிழக முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப தாயகம் திரும்புவதற்கோ அல்லது தொடர்ந்தும் தமிழகத்தில் இருப்பதற்கோ உரிய ஏற்பாடுகளை தமிழக முதலமைச்சர் செய்ய வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை யுத்தம் காரணமாகவே இங்கிருந்து பலரும் வெளிநாடுகளுக்குச் சென்ற நிலையில், அவ்வாறு வருவர்களுக்கு அடைக்கலம் தருவதாக கூறி கொண்டே ஈழத்தமிழர்களை சிறப்பு முகாம்களில் அடைத்து வைத்திருப்பது என்பது உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.

ஆகவே அவர்களை விடுவிப்பதற்கு தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்விடயத்தில் தமிழக முதலமைச்சர் உடனடியாக தலையிட்டு அவர்களின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார்.

## ஜோன்ஸ்டனை தேடி பல பொலிஸ்

மற்றும் காலி முகத்திடலில் அமைதியான போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இன்னும் கைது செய்யவில்லை.

இந்த நிலையிலேயே, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மஹிந்த கஹந்தகம உள்ளிட்ட நால்வர் சந்தேகநபர்களாக குறிப்பிடப்படவுள்ளதாக கடந்த வாரம் சட்டமா அதிபர் கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தார்.

சந்தேக நபராக பெயரிடப்பட்ட மஹிந்த கஹந்தகம குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் சரணடைந்த பின்னரே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஜூன் 2ஆம் திகதி அவரைக் கைது செய்தனர்.

அதன்பின்னர் அவரை ஜூன் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரசன்ன ரணதுங்கவுக்கு 2 வருட கடூழிய

ஜூன் மாதம் 2 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் குற்றங்களை இழைத்த குற்றச்சாட்டின் அடிப்படையில் அப்போதைய மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அவரது மனைவி மொபீன் ரணதுங்க மற்றும் நரேஷ் குமார் ஃபபீக் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் 15 குற்றச்சாட்டுக்களை தாக்கல் செய்தமை குறிப்பிடதக்கது .

இதற்கமைய அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 25 மில்லியன் ரூபா அபராதமும் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது .

# புல்மோட்டை மருதங்குள விவசாயிகளின் 35 ஏக்கர் நெற்செய்கை முறையான நீர்முகாமையின்மையால் அழிவடைவு

## நஷ்டஈடு பெற்றுத்தருமாறு கோரிக்கை







**(எப்.முபாரக்)**

புல்மோட்டை- 04ம் வட்டாரம் மருதங்குளவிவசாய சம்மோளனத்திற்குட்பட்ட பாலங்குளத்தில் நீர்கொள்ளும் அளவு மிகவும் குறைவாக இருப்பதால் அருகிலுள்ள சின்ன மருதங்குளத்தையும் இணைத்து நீர் விநியோகம் செய்து முற்பகுதி 35ஏக்கர் பிற்பகுதி 35ஏக்கர் என மொத்தம் %0 ஏக்கர் நெற்செய்கை செய்வதென புல்மோட்டை கம நல அபிவிருத்தி உத்தியோகத்தரின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற 2022-03-02ஆம் திகதிய சிறுபோகக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு அதற்கமைவாக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பாலங்குளத்து நீர் முடிவடைந்ததையடுத்து சின்ன மருதங்குளத்திலிருந்து தமது விவசாயத்திற்காக பிற்பகுதி விவசாயிகள் நீரைக்கோரிய போது பாலங்குளத்திலிருந்து பிற்பகுதி 35 ஏக்கருக்குமான நீரை பெறுவதென தீர்மானிக்கப்பட்டதாக மாற்றி எழுதப்பட்ட கூட்டத்தீர்மானத்தை விவசாயிகளுக்கு காண்பிக்கப்பட்டதனால் விவசாயிகள் திகில் அடைந்தவர்களாக புல்மோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்த போது கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் 15 நாட்களாக கடமையில் இல்லாத காரணத்தால் விவசாய சங்க நிருவாகிகளுடன் பொலிசார் சமரசப் பேச்சில் ஈடுபட்டு ஒரு தடவை நீர் விநியோகிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது அதனையடுத்து இதுவரையிலும் நீர் விநியோகிக்கப்படாததால் நெற்செய்கை முற்றாக அழிவடைந்து காணப்படுகின்றது

அழிவடைந்து செல்லும் விவசாயத்திற்கு நீர்பாய்ச்சுவதற்கு விவசாய சங்கத்தின் 08 உறுப்பினர்கள் முயற்சிகளைமேற்கொண்ட போது அம்முயர்ச்சியை முறியடித்து வட்டசேவையாளருக்கு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கடிதம் வளங்கியிருந்தார்.

இதற்கிடையே நீர்பாய்ச்சப்படாத வயலுக்கப்பாலுள்ள சிலரது செல்வாக்கைப்பயன்படுத்தி அவர்களது வயலுக்கு மாத்திரம் நீர் விநியோகிக்கப்பட்டதை அறிந்து தமது வயலுக்குமான நீரைப்பெற்றுத்தரக்கோரி 04ம் வட்டார கிராம சேவையாளர் ஜனாப் அபுல் கசன் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜனாப் நவ்பர் புல்மோட்டை கமநல சேவைகள் நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜனாப் ஜவாத் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜனாப் றனூஸ் மற்றும் விவசாய சங்க நிருவாகிகள் என பலரையும் அழைத்துச் சென்று நீர் விநியோகத்திலுள்ள பாகுபாட்டினை காண்பித்போது மீண்டும் மூன்று ஏக்கருக்கு மாத்திரம் நீர் விநியோகிக்கப்பட்டதுடன் நிறுத்தப்பட்டதைத்தவிர தமக்கான நியாயம் கிடைக்காததால் விவசாயிகள் பெரிதும் அதிருப்தியிலுள்ளனர்.

சட்டபூர்வமான நெற்செய்கைக்கு பயிர் காப்புறுதி பெறப்பட்டுள்ளதுடன் அரச மானிய சேதன உரங்கள் வழங்கப்பட்டும் அதற்கான பற்றுச்சீட்டுக்கள் இன்னும் வழங்கப்படாதுள்ளதானது விவசாயிகளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது

மாற்றி எழுதப்பட்ட சிறுபோகக் கூட்டறிக்கையில் விவசாய போதனாசிரியர் கிராம சேவையாளர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் என எவரது கையொப்பங்களும் இல்லாததால் அது தொடர்பில் தமக்குத்தெரியாதென அவர்கள் கூறுகின்றனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நீர் கொள்ளவில்லாத குளத்தைக்குறிப்பிட்டு பாமர விவசாயிகளை 35 ஏக்கர் நெற்செய்கைக்கு அனுமதித்து விவசாயிகள் கடன்பட்டு முதலீடு செய்ய வைத்து இரசாயன உரங்கள் களை பூச்சி நாசினிகள் காவல் வேலி உளவு கூலி விதை நெல் என பல இலட்சங்கள் செலவு செய்ய செய்து நட்டமடைவதற்கு முழுக் காரணமாக இருந்து தனது கடமையை உதாசீனம் செய்த புல்மோட்டை கம நல அபிவிருத்தி உத்தியோகத்தர் அவர்களே பொறுப்புக்கூற வேண்டும் என விவசாயிகள் தெரிவிப்பதோடு

குளத்தின் நீர் கொள்ளளவு தொடர்பாக திருகோணமலை கம நல அபிவிருத்தி திணைக்கள தொழில் நுட்ப உத்தியோகத்தர்களின் அறிக்கை பெறப்படாமை ஏன் எனவும் கேள்வி எழுப்புகின்றனர்.இச்செயற்பாட்டினால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்

அதற்கு தமக்கு நஷ்டஈடு பெற்றுத்தருமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# போய்யர்களிடமும் கள்வர்களிடமும் அகப்பட்ட விவசாய அமைச்சு

**(ஹஸ்பர்)**



இலங்கையின் விவசாயத்துறை பாதிக்கப்பட்டதற்கு விவசாய அமைச்சானது பொய்யர்களிடமும் கள்வர்களிடமும் அகப்பட்டமையே காரணம் என கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம். எம். மஹ்தி தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, நாடும் நாட்டு மக்களும் முகங்கொடுக்கும் பொருட் தட்டுப்பாடு, விலையுயர்வு, உணவுப் பஞ்சம் என்பவற்றுக்கு இவ்வாறான கள்வர்களும் பொய்யர்களும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டமையே உண்மைக் காரணமாகும்.

இரசாயன உர இறக்குமதியை நிறுத்தியமை, இறக்குமதி செய்யப் படாத சேதன உரக் கப்பலுக்கு கட்டணம் செலுத்தியமை, உரிய நேரத்திற்கு சேதனப் பசளையை கூட வழங்காமை, சிறு போகத்திற்கு இரசாயன உரம் வழங்கப் படும் என பொய்களைகூறி விவசாயிகளை ஏமாற்றியமை, என்பன இவற்றிற்கு சிறந்த சான்றுகளாகும்.

நாம் எதிர்பார்ப்பது போன்று உணவு பஞ்சம் ஒன்று ஏற்படுமாக இருந்தால் நாட்டு மக்களுக்கும் விவசாயிகளுக்கும் விவசாயத்துறையை பொறுப்பேற்றிருந்த அமைச்சர்களே பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அவர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# கரித்தாஸ் எகெட் நிறுவனத்தினால் சிரமதானப் பணி





உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு 'பசுமையான உலகை உருவாக்க ஒன்றிணைவோம்' - கரித்தாஸ் எகெட் நிறுவனத்தினால் சிரமதானப் பணி.

உலக சுற்றாடல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு 'பசுமையான உலகை உருவாக்க ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு வாவிக்கரையோரத்தை சுத்தப்படுத்தும் நிகழ்வொன்று ஞாயிற்றுக்கிழமை(05) முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட சிரமதானப் பணியானது புளியடிக்குடா, பெரிய உரிபோடை, சின்ன உப்போடை மற்றும் முனிச் வீதியை அண்டிய வாவிக்கரையோரங்களில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன், மாநகர சபை உறுப்பினர் சிவம் பாக்கியநாதன், அருட்தந்தை ஜீ.டிலிமா அடிகளார், கரிதாஸ் எகெட் நிறுவன உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், சர்வமத ஒன்றிய உறுப்பினர்கள், எகெட் சூழல் பாதுகாப்புக் குழுக்கள், எகெட் சமாதானக் குழுக்கள், எகெட் சர்வமதக் குழுக்கள், எகெட் இளைஞர் குழுக்கள், சின்ன உப்போடை, பெரிய உப்போடை மற்றும் புளியடிக்குடா வாழ் மக்கள் என பெருமளவிலானோர் இதன்போது கலந்து கொண்டு சிரமதானப் பணியினை முன்னெடுத்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட கரிட்டாஸ் எகெட் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்பணி ஏ.யேசுதாசன் அடிகளாரது ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட குறித்த தூய்மைப்படுத்தும் செயற்பாடானது, கரிட்டாஸ் எகெட் நிறுவனத்தின் சுற்றாடல் பாதுகாப்பு செயற்திட்டத்தின் (SSEP) கீழ் முன்னெடுக்கப்பட்டதுடன், இதற்கான நிதிப் பங்களிப்பினை கரிட்டாஸ் ஸ்ரீலங்கா தேசிய மத்திய நிலையத்தின் (SEDEC) ஏற்பாட்டில் Missereor நிறுவனம் வழங்கி வைத்துள்ளதுடன், சுகாதாரமான சூழலை உருவாக்க குறித்த நிறுவனம் முன்னின்று செயற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மாநகர சபை உறுப்பினர் ராஜனுக்கு பிடிவிறாந்து

**( காரைதீவு சகா)**



கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சந்திரசேகரன் ராஜனுக்கு பிடிவிறாந்து பிறப்பிக்கப் பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் ஆஜராகாத காரணத்தினால் கல்முனை நீதவான் நீதிமன்ற நீதவான் சம்சுதீன் இந்த பிடிவிறாந்தை பிறப்பித்திருக்கிறார்.

கல்முனை இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற காணியொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பான வழக்கு கடந்த 1ஆம் தேதி புதன்கிழமை கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது . இஸ்லாமாபாத்தில் இருக்கின்ற தமது காணியில் கட்டுமான பணிகளை செய்வதற்கு சென்றவேளைகாணிக்குள் அத்துமீறி நுழைந்து தன்னையும் தனது வேலையாட்களையும் விடாது தொந்தரவு இடையூறு செய்து அச்சுறுத்தல் விடுத்தமையை எதிர்த்து கல்முனையைச் சேர்ந்த அப்துல் ஹமீட் ஜவாஹிர் என்பவர் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார் .

அந்த வழக்கு 1 ஆம் திகதி புதன்கிழமை எடுத்துக் கொளப்பட்டது.

எதிராளிகள் ஆக மாநகரசபை சந்திரசேகரன் ராஜனும் கல்முனை மெதடிஸ்த குரு கிருபைராஜா பாஸ்டரும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

வழக்கு நடந்த அன்று கிருபைராஜா பாஸ்டர் சமூகமளித்திருந்தார். அவருக்கு ஒரு லட்ச ரூபா சரீர பிணையுடன் நீதவான் விடுவித்தார்.

உறுப்பினர் ராஜன் சமூகமளிக்காத காரணத்தால் அவருக்கு நீதவான் பிடிவிறாந்து பிறப்பித்தார்.

எதிராளிகள் சார்பிலே சிரேஷ்ட சட்டத்தரணி என் .சிவரஞ்சித் ஆஜராகி வாதிட்டமை குறிப்பிடத்தக்கது.

அடுத்த தவணை 19.%.2022 நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

# கந்தளாயில் பாலர் பாடசாலைகளுக்கு குடிநீர் வசதி

**(எப்.முபாரக் )**

அல்ஹித்மத்துல் உம்மா பௌண்டேஷனினால் கந்தளாயில் அமைந்துள்ள மூன்று பாலர் பாடசாலைகளுக்கு குடிநீர்பெற்றுக்கொடுக்கப்பட்டு மாணவர்களின் பாவணைக்கு கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

அல்ஹித்மத்துல் உம்மா பௌண்டேசனின் தலைவரும் சமூகசேவையாளருமான கஸ்ஸாலி முகமட் பாத்திஹ் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் விசேட அதிதியாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளரான ஆசிரியர் ஏ.எல்.முகமட் நபீல் கலந்துகொண்டார். பாலர் பாடசாலைகளான பாத்திமா பாலர் பாடசாலை,அஸ்ஸபா பாலர் பாடசாலை,ஆயிஷா பாலர் பாடசாலை ஆகியவற்றுக்கே இக்குடி நீர் வசதி செய்துகொடுக்கப்பட்டது.



# முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பம்!!





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

அரச மற்றும் அரச அனுசரனையின் கீழ் இயங்கும் தனியார் பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் நாடு பூராகவும் நேற்று திங்கட்கிழமை (6) திகதி முதல் மீள ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்தல் விடுத்திருந்தது.

கல்வி அமைச்சின் அறிவித்தலிற்கு அமைவாக முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகளுக்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களிலும் இன்றைய தினம் பாடசாலைகள் மீளதிறக்கப்பட்டு கல்வி நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொருட்டு அதிபர்களும், ஆசிரியர்களும் கடமைக்கு சமூகமளித்திருந்தமையினை காணமுடிந்தது.

அதே வேளை மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட மட்டக்களப்பு நகர் பகுதியில் உள்ள புனித மிக்கேல் கல்லூரி, புனித சிசிலியா கல்லூரி மற்றும் வின்சன்ட் மகளீர் தேசிய பாடசாலை ஆகியவற்றிற்கு அதிகளவிலான மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைக்கு வருகை தந்திருந்ததுடன், எரிபொருள் தட்டுப்பாடு காணப்படுகின்ற போதிலும் பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலையில் கொண்டுவந்து விடுவதையும், சில மாணவர்கள் பாடசாலை சேவை பஸ்களிலும், துவிச்சக்கர வண்டியிலும் பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி முதலாம் தவணையின் முதலாம் கட்டத்தை நிறைவுறுத்தி பாடசாலைகளுக்கான விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

# மன்னாரில் மாற்றாற்றல் வீரர்களுக்கு விளையாட்டு போட்டிகள்





**(வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலுமுள்ள மாற்றாற்றல் கொண்டவர்களுக்கான விளையாட்டு விழா மன்னாரில் சிறப்பாக இடம்பெற்றது

கடந்த வெள்ளிக்கிழமை (03.06.2022) மன்னார் மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் வே.சிவராஜா தலைமையில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மைதானத்தில் இவ் விழா இடம்பெற்றது.

இவ் விழாவுக்கு பிரதம அதிதியாக மன்னார் அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டார்.

இவ் விளையாட்டு போட்டிகளில் மன்னார் , நானாட்டான் , முசலி , மாந்தை மேற்கு , மடு ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள மாற்றாற்றல் கொண்ட வீரர்கள் வீராங்கனைகள் இவ் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டனர்.

இவ் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய வீரர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் தேசிய மட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களும் இவ் நிகழ்வின்போது கௌரவிக்கப்பட்டனர்.

சமூக சேவைகள் திணைக்களம் , வொயிஸ் நிறுவனம் , வாழவுதயம் , மார் மற்றும் மார்டப் ஆகிய நிறுவனங்கள் இவ் விளையாட்டு விழாவுக்கான அனுசரனை வழங்கி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர்களுக்கு ஆன்மீக செயலமர்வு





**( காரைதீவு சகா)**

மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷனில் ஆசிரியர்களுக்கான ஆன்மீக பயிற்சி செயலமர்வு நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் 125வது வருட நிறைவையொட்டிய விழாத் தொடரின் ஓரங்கமாக இச் செயற்பாடு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்லடி இராமகிருஷ்ண மிஷன் உதவி மேலாளர் சுவாமி ஸ்ரீமத் நீலமாதவானந்தஜீ மஹராஜ் ஆசிரியர்கள் மனதை எவ்வாறு தமது கட்டுக்குள் வைத்திருப்பது சம்பந்தமான விடயங்களையும், தியானம் செய்வதற்கான அடிப்படை நுட்பங்களையும் பயிற்சியளித்தார்.

கல்லடி இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சுவாமி ஸ்ரீமத் தக்ஷஜானந்தஜீ மஹராஜ் உடல் வலிமை மற்றும் தன்னம்பிக்கை வளர்த்தல் போன்ற கருத்துக்களையும் ஆசிரியர்கள் தொழில்நுட்பத்துடன் எவ்வாறு ஆன்மீகத்தையும் கடைப்பிடித்து முன்னேற முடியும் என்ற விடயங்களையும் பயிற்சி அளித்தார். விரிவுரையாளர் கே.ஞானரெத்தினம் ''ஆசிரியர்களின் பங்கு ''பற்றி உரையாற்றினார்.

இந்திய சென்னையிலிருந்து இ.கி.மிஷன் சுவாமி களின் காணொளி உரை இடம்பெற்றது.

இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ மஹராஜ் மனப்பாங்கு மாற்றம், விதியை வெல்லும் வழி, ஆளுமைக்கான திறன்களை வளர்த்துக் கொள்ளுதல் மற்றும் தற்போதய நிலையில் மாணவர்கள் பின்பற்றவேண்டிய வழிமுறைகள் என பல விடயங்களை பயிற்சியளித்தார்.

இறுதியாக சிவானந்தா வித்தியாலய அதிபர் எஸ்.சுவர்ணேஸ்வரனின் நன்றி உரையுடன் மாணவர்களுக்கான இனிய மதியபோசனத்துடன் சிறப்புற இச் செயலமர்வு நிறைவேறியது.

# கட்டடம் அமைந்துள்ள பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை ஆரம்பித்தல்!!






**(மட்டு. துஷாரா)**

உலக சுற்றுச் சூழல் தினத்தினை முன்னிட்டு பூலோகம் ஒரே ஒரு குடிமனைஎனும் தொனிப்பொருளில் எதிர்கால சந்ததியினரை ஊக்குவிக்கும் நோக்கில் வீட்டுத்தோட்டம் அமைக்கும் விழிப்புணர்வுகளுடன், வீட்டுத்தோட்டங்கள் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வும் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தினால், பிரதேச செயலாளர் திருமதி.சிவப்பிரியா வில்வரத்னம் தலைமை மற்றும் வழிகாட்டுதலில் இடம்பெற்றது.


கடந்த ஒரு வாரகாலமாக கொண்டாடப்பட்டு வந்த உலக சுற்றுச் சூழல் தினத்தையொட்டி உணவுப் பாதுகாப்பு மற்றும் சிக்கனம் தொடர்பில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் கீழுள்ள 45 கிராம சேவகர் பிரிவுகளில் 225 விழிப்புணர்வு நிகழ்வுகள் மக்களிடத்தில் நடாத்தி வைக்கப்பட்ட அதேவேளை, அப்பிரிவு மக்களுக்கு வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கான விதைகளும், மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டு வீட்டுத் தோட்டங்களும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறிப்பாக, கட்டடம் அமைந்துள்ள பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை ஆரம்பித்தல், பிரதேச செயலக பசுமைக்கழக உறுப்பினர்களால் வருடாந்தம் வெளியிடப்படும் சுற்றாடல் செய்திமடல் வெளியீடு, உணவுப் பாதுகாப்பு மற்றும் சிக்கனம் தொடர்பில் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள், வீட்டுத்தோட்டம் செய்வதற்கான மரக்கன்றுகள் மற்றும் விதைகள் போன்வை பொதுமக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதில், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், பசுமைக் கழக உறுப்பினர்கள், கிராம சேவனர்கள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




# சிட்னி 'உதயசூரியன்' கிழக்கு 'உதயசூரியனுக்'கு சிலை எடுக்கிறார்



Swami Vipulananda
சுவாமி விபுலானந்தர்
(1892 - 1947)
Founder:Ramakrishna Mission, Sri Lanka

**( காரைதீவு சகா)**

சிட்னியில் வாழும் காரைதீவைச் சேர்ந்த 'உதயசூரியன்' மாணவர் உதவி மையத்தின் தலைவரும், 'உதயசூரியன்' பத்திரிகையின் நிர்வாக ஆசிரியருமான நாகமணி குணரெத்தினம் 'கிழக்கு உதயசூரியன்' முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு சிலை எடுக்கிறார்.

காரைதீவு சண்முகா மகா வித்தியாலயத்திலும் ,காரைதீவு சுவாமி விபுலானந்த கலாசார மண்டபத்திலும் விபுலானந்த சிலைகள் நிறுவப்படவுள்ளன

தனதுபெற்றோரான காரைதீவைச் சேர்ந்த பொன்னம்பலம் நாகமணி தம்பதிகள் நினைவாகவும், தனதுவளர்ப்பு தந்தை காத்தமுத்து வேல்நாயகம் (தலைமை ஆசிரியர்)தம்பதிகளின் நினைவாகவும் இச்சிலைகள் நிறுவப்படவுள்ளன.

காரைதீவு சண்முகவித்தியாலயத்தில் சுவாமி விபுலாநந்த அடிகளாரது திருவுருவச் சிலை ஒன்றினை நிறுவும் பணியினை அதிபர் எஸ்.மணிமாறன் மற்றும் எம்.புண்ணியநாதனது கண்காணிப்பில் ஆரம்பித்துள்ளார் .

கலாச்சார மண்டபத்தில் சிலை நிறுவும் பணி தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மற்றும் ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா வழிகாட்டலில் ஆரம்பிக்கப்படவுள்ளது.



இச்சிலைகள் பெரும்பாலும் சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிரார்த்த தினமான யூலை மாதம் 19 ஆம் திகதி திறந்து வைக்கலாம் என எதிர்பார்ப்பதாக உதயசூரியன் மாணவர் உதவி மையத்தின் தலைவரும், உதயசூரியன் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியருமான நாகமணி குணரெத்தினம் தெரிவித்தார்.

# ஆயுதத்துடன் வந்து உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்தனர்!

## மனித உரிமை ஆணைக்குழுவில் மாநகரசபை உறுப்பினர் ராஜன் முறைப்பாடு

( வி.ரி.சகாதேவராஜா)

மின்தடை நேரத்தில் ஆயுதத்துடன் வந்த சீருடையினர், தன்னை விசாரிப்பதாக கூறி விரட்டி உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இவ்வாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் கல்முனை மாநகர சபையின் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்சாமுவேல் சந்திரசேகரம் ராஜன் முறைப்பாடு தெரிவித்துள்ளார்..

கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் ஏ.சி. அப்துல் அசீஸ் இடம் அவரது முறைப்பாட்டை நேற்று(6) திங்கட்கிழமை கையளித்தார்.

அவரது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த 2 ஆம் திகதி இரவு மின்தடை நேரம் பெரிய நீலாவணையிலுள்ள எனது வீட்டுக்கு வந்த ஆயுதம் தரித்த நான்கு இராணுவத்தினரும் தங்களை கொழும்பு புலனாய்வுப் பிரிவினர் என்று அடையாளப்படுத்திய இருவரும் விசாரிக்க வந்ததாக கூறினர். கொழும்பிலிருந்து வந்த புலனாய்வுப் பிரிவினர் என்பதால் அவர்களிடம் அடையாள அட்டையை கேட்



டேன். ஆனால் அவர்கள் தர மறுத்தனர் .

நான் கல்முனையில் உண்ணாவிரதமிருந்தமை தொடக்கம் கடந்த மாதம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வரை நான் சம்பந்தப்பட்ட விடயங்களில் என்னை துருவித்துருவி விசாரித்தனர்.

இறுதியில் வெளியில் நடமாடக் கூடாது என்று அச்சுறுத்தியதோடு எனக்கும் மனைவி பிள்ளை மற்றும் மருமகனுக்கும் பயமுறுத்தி அச்சுறுத்தல் விடுத்துச் சென்றுள்ளனர் .

இதற்கு முன்னும், 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலின் போதும், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போதும் 2020ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலின் போதும் இனந்தெரியாத ஆயுத குழுக்கள் போலீசார் புலனாய்வுக் குழுவினர் என தொடர்ச்சியாக அடுத்தடுத்து வந்து என்னை விரட்டினர்.

தற்போது மீண்டும் இந்த அச்சுறுத்தலை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் ,மனித உரிமையுடன் சுதந்திரமாக வாழமுடியாத துப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. எனக்கு வாக்களித்த மக்களுக்கு உதவ முடியாத நிலையில் உள்ளேன்.சமுகசேவைசெய்ய தடை ஏற்பட்டுள்ளது.உளவியல் ரீதியான தாக்கம் அதிகமாக உள்ளது.குடும்பமும் அச்சத்தில் உள்ளனர்.

எனது உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் பயபீதியுடன் நடைப்பிணமாக குடும்பத்துடன் காலம் கடத்திவருகிறேன்.

இது தொடர்பாக எமது அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்த.கலை அரசனிடமும் முறையிட்டுள்ளேன்.

இவர்களை அடையாளம் கண்டு எனக்கு நீதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ,மாநகர சபை உறுப்பினர் சாமுவேல் சந்திரசேகரம் ராஜன் தெரிவித்திருக்கின்றார்.

# கல்முனையில் மீண்டும் மண்ணெண்ணெய்க்கு வரிசை



( காரைதீவு சகா)

கல்முனை மாநகரத்தில் மண்ணெண்ணெய் பெறுவதற்காக நேற்று சனிக்கிழமை அதிகாலை முதல் ஆயிரக்கணக்கான மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சூழ்ந்து கொண்டனர்.

நேற்று அதிகாலையில் இருந்தே இந்த மக்கள் வரிசையில் கொள்கலன் களுடன் ஆண்களும் பெண்களுமாக நிற்க காணப்பட்டனர்.

காலை 8 மணி முதல் மண்ணெண்ணெய் மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்பட்டது.

கல்முனை மாநகரின் மத்தியிலுள்ள ஒரே ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இந்த மண்ணெண்ணெய் விநியோகிக்கப் பட்டதால் ஏகப்பட்ட கூட்டம் வரிசையில் நின்றது.

போக்குவரத்து ஒரு சில மணி நேரம் தாமதம் அடைந்தது. போலீசார் போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டனர். இதே வேளை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெட்ரோல் தாராளமாக காணப்பட்டாலும் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் அலுவலக உத்தியோகத்தர்களால் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் நேற்று (06) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ்வலுவலகத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் கடந்த ஆண்டு இதே தினத்தில் மரணமடைந்திருந்தார். அவ்வாறு மரணமடைந்த அமரர் செ. ஜெயகாந்தன் குரூஸ் என்பரின் ஓராண்டு நினைவினை முன்னிட்டு மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவினால் இவ்விரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது மாவட்ட செயலகத்தில் உள்ள அனைத்து கிளைகளின் அலுவலர்கள் அதிகமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்ததானத்தினை வழங்கிவைத்தனர். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை, மகப்பேற்றுப் பிரிவு மற்றும் அறுவை சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்குத் தேவையான இரத்த தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக இவ்விரத்த தானம் வழங்கப்பட்டது. போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்குப் பொறுப்பான வைத்தியர்குழாம் மாவட்ட செயலகத்திற்கு வருகைதந்து இவ்வுதிரங்களை சேகரித்துக் கொண்டனர்.

அலுவலக சக உத்தியோகத்தரின் நினைவாக இவ்வாறான மனித நேய பணியினை மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மேற்கொண்டமை வரவேற்கத்தக்கதும் முன்னுதாரணமுமான செயற்பாடாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக பிரான்சிஸ் மகேந்திரன் நியமனம்!!



ஐக்கிய மக்கள்சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக தாழங்குடாவைச் சேர்ந்த பிரபல ஆசிரியரும் முன்னாள் அதிபருமான பிரான்சிஸ் மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் முகாமைத்துவ குழுவின் பரிந்துரையின் பேரில் கட்சியின் செயற்குழுவின் அங்கீகாரத்துடன் நேற்று 05/06/2022 திகதி எதிர் கட்சி அலுவலகத்தில் வைத்து இவருக்கான நியமனக்கடிதம் எதிர்கட்சி தலைவரும் கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாச அவர்களினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது கட்சியின் பொதுச் செயலாளர் மத்தும பண்டார உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

கடந்த காலங்களில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்காக மட்டக்களப்பில் சிறந்த முறையில் செயற்பட்டமையினால் குறித்த நியமனம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக கட்சியின் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு கடந்த பாராளுமன்ற தேர்தலில் இவர் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகளவிலான வாக்குகளை பெற்றுக்கொடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு புலவர்மணியில் மரம் நடுகை





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு இன்று (ஜூன் 5) பெரியநீலாவணை புலவர்மணி சரிபுத்தீன் மஹா வித்தியாலயம் ஏற்பாடு செய்த மரம் நடுகை நிகழ்வு பாடசாலை வளாகத்தில் அதிபர் எம். எம். முஹம்மட் நியாஸ் தலைமையில் பிரதி அதிபர் எம்.சி நசார் ஒருங்கிணைப்போடு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவரும் பொத்துவில் மாவட்ட நீதிபதியுமான ஏ.சி.றிஸ்வான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாடசாலையில் பசுமை சூழலை உருவாக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் பயன்தரும் மரக்கன்றுகளை நட்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

பாடசாலைச் சூழலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு பொருத்தமான பசுமையான சூழலாக உருவாக்கவேண்டிய விடயம் தொடர்பிலும், பாடசாலையின் எதிர்கால கல்விச் செயற்பாடுகள் தொடர்பிலும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரதம அதிதி பாடசாலை ஆசிரியர்களோடு சுமுகமாக கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார்.

இந்த நிகழ்வில், வலயக்கல்வி அலுவலகத்துக்கான பாடசாலை இணைப்பாளர் பி.ரி.ஏ.மஹ்றூப், அபிவிருத்திக் குழுச் செயலாளர் ஏ.ஏ.அஸீஸ் உட்பட பாடசாலையின் ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நலன்விரும்பிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# கலாபூசண அரச விருதுபெறும் கலைமாமணி இராசையா




கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற. 37 வது கலாபூசண அரச விருது வழங்கும் விழா கொழும்பு 07 பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடை பெற்றது. இதன்போது இலக்கியத்துறைக்காக. மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட. கிராமக்கோட் வீதி ஆரையம்பதியைச் சேர்ந்த. கலைமாமணி இராசையா கிருஷ்ணபிள்ளை(ஜே.பி ) அவர்கட்கு கலாபூசண அரச விருது வழங்கி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம். (ரக்ஸனா)

# வட, கிழக்கு விவசாயிகளுக்கு உரம் தக்க காலத்தில் கிடைக்க வழி சமைக்கவும் இந்திய தூதுவருக்கு பறந்தது மடல்

( வாஸ் கூஞ்ஞ)

வடக்கு கிழக்கு பகுதி விவசாயிகளுக்கு தகுந்த காலத்தில் விவசாயத்துக்கான உரம் கிடைக்காமையால் இப்பகுதி விவசாயிகள் மிகவும் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றார்கள் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானியருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கு அனுப்பியுள்ள மடலில் வடக்கு கிழக்கில் வாழும் பெரும்பாலான தமிழ் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர்.

இவ் தமிழ் மக்கள் தற்பொழுது விவசாய நெற் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ் விவசாயிகளுக்கு தகுந்த உரங்கள் தகுந்த நேரத்தில் கிடைக்காததால் இவர்களின் விவசாயம் மற்றும்



இவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிப்புகளுக்கு உள்ளாகும் அபாயம் தோன்றியுள்ளது.

எனவே சரியானதை சரியான நேரத்தில் பெறுவதே முக்கியமானதாகும்.

ஆகவே தாங்கள் இந்திய பிரதமருடன் இதுவிடயமாக கலந்தாலோசித்து இது குறித்து தீர்க்கமான ஒரு முடிவை மேற்கொள்ளுமாறு இவ் வாழ் தமிழ் மக்கள் சார்பாக தங்களை மிக பணிவாக வேண்டி நிற்கின்றேன் என இவ்வாறு இலங்கைகான இந்திய தூதுவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# கல்முனையில் சாதனை மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு







(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட கல்முனை கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 145 மாணவர்களையும், அவர்களுக்கு கற்பித்த 46 ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசன் அனுசரனையில் கல்முனை கோட்டக்கல்வி பணிப்பாளர் வி.எம்.ஸம்சம் தலைமையில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி ஆராதனை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசன் ஸ்தாபகத் தலைவியும் சட்டத்தரணியுமான மரியம் நளிமுத்தீன் (அவுஸ்திரேலிய முஸ்லிம் பெண்கள் கவுன்சிலின் செயலாளர்) அவர்களும், கௌரவ அதிதிகளாக டொக்டர். எஸ்.நஜிமுத்தீன், கல்முனைப் பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் திட்டமிடல் பணிப்பாளர் எம்.சி.எம்.மாஹிர், கல்முனை வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர் , விஷேட அதிதிகளாக கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் வை.ஏ.கே. தாஸிம் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள் ,பிரதி அதிபர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

2021 ஆண்டில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 145 மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்களும் சான்றிதழ்களும் வழங்கியதோடு, கற்பித்த 46 ஆசிரியர்களுக்கும் நினைவு சின்னங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்வில் ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசன் மகோன்னத சேவைகளினை பாராட்டும் முகமாக கல்முனை வலயக்கல்வி கோட்ட அதிகாரிகள் மற்றும் அதிதிகளினால் ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசன் ஸ்தாபகத் தலைவியும் சட்டத்தரணியுமான மரியம் நளிமுத்தீனுக்கு பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டார்.

# கந்தளாயில் பாடசாலைகள் முதலாம் தவணைக்காக ஆரம்பம்





(எப்.முபாரக் )

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகள் நேற்று(6) ஆரம்பமாகின.

நீண்ட விடுமுறையின் பின்னர் நாட்டின் பொருளாதார பின்னடைவுகளின் பிற்பாடு முதலாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் வருகை சற்று குறைவாக இருப்பதாகவும் பாடசாலை அதிபர்கள் தெரிவித்தனர்.

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் சில தனியார் பஸ்களும் கந்தளாயில் சேவைகளில் ஈடுபடவில்லை.

# சாய்ந்தமருது தொழிற் பயிற்சி நிலையத்தில் புதிய பாட நெறிகள் அங்குரார்ப்பண நிகழ்வு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாய்ந்தமருது தொழிற் பயிற்சி நிலையத்தில் புதிய கல்வி ஆண்டுகான பாட நெறிகள் நேற்று திங்கட்கிழமை (06) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரி.எம்.ஹாரூன் தலைமையில் இடம்பெற்ற இதன் அங்குரார்ப்பண நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.தியாகராஜா பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது குறித்த பாட நெறிகளுக்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்ளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. காலத்தை வீணடிக்காமல் உரிய காலப்பகுதிக்குள்



அவரவர் இணைந்துள்ள பாடநெறியை மிகவும் ஆர்வத்துடன் சிறப்பாக பூர்த்தி செய்து, சான்றிதழைப் பெற்றுக்கொள்வதில் முனைப்புக்காட்ட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

பொருளாதார நெருக்கடி நிறைந்த இக்காலகட்டத்தில் இப்பயிற்சி நெறிககளை வெற்றிகரமாக பூர்த்தி செய்து, தொழிற் தகைமையை பெற்றுக் கொள்வதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தொழிற் சந்தையில் நல்ல வருமானத்தை ஈட்டக்கூடிய தொழில் வாய்ப்புகளை இலகுவாக பெற்றுக் கொள்ள முடியுமாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இங்கு ஆங்கிலம், சிங்களம், தகவல் தொழில்நுட்பம், இணையத்தள வடிவமைப்பு, கையடக்க தொலைபேசி திருத்தம் உள்ளிட்ட பாட நெறிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. பகுதி நேரம், முழு நேரம் என வகுப்புகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இம்முறை இப்பாட நெறிகளைப் பயில்வதற்காக 242 பேர் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் என நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரி.எம். ஹாரூன் தெரிவித்தார்.

# திருக்கோவிலில் இராணுவத்தின் ஏற்பாட்டில் வறுமையான குடும்பங்களுக்கு நிவாரணம்





( காரைதீவு நிருபர் சகா)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் திருக்கோவில் பிரதேசத்தில் வறுமையால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 100 குடுபங்களுக்கு உலர் நிவாரணப் பொதிகள் வழங்கும் வைக்கப்பட்டன.

திருக்கோவில் காஞ்சிரன்குடா இராணுவத்தளபதி மற்றும் கோமாரி பிரிகேட் கட்டளை தளபதி ஆகியோரால் இந் நிவாரணப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இவ் நிவாரணப்பொதிகளுக்கு கொரனைப்பிரதேசத்தை சேர் பௌத்த பிக்கு ஒருவர் நிதி அனுசரணை வழங்கியேள்ளார்.

மேலும் ,இந் நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் ,மற்றும் 242படையனியின் விரிகேட் கமாண்டர் பெனதுறு, சிவில் நிருவாக பொறுப்பதிகாரி கேணல்.சில்வா, காஞ்சிரன் குடா படைப்பிரிவு முகாம் பொறுப்பதிகாரி மேஜர் அமதுறு மற்றும் கிராம சேவை உத்தியோத்தர்கள் சமூர்த்தி உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் இராணுவத்தினர் என பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மக்குளூற்று பாலர் பாடசாலையின் சிறுவர் மாதிரி சந்தை



(எப்.முபாரக்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக்கு உட்பட மக்குளூற்று பாலர் பாடசாலையின் சிறுவர் மாதிரி சந்தை மக்குளூற்று கரப்பந்தாட்ட மைதானத்தில் (5) மிக சிறப்பாக நடைபெற்றது.

மக்குளூற்று பாலர் பாடசாலை ஆசிரியர்களின் வழிகாட்டலில் 21 மாணவர்களுக்கு அவர்களின் பெற்றோர்களின் மூலம் சிறுவர் மாதிரி சந்தை அமைக்கப்பட்டு பொருட்கள் மாணவர்களினால் விற்பனை செய்யப்பட்டது.

இன் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் அவர்களின் செயலாளர் ஏ.சதாத் கரீம், பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முகம்மட் நௌபர்

தி/ அல் அஸ்ஹர் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் அமீன், தி/ கருமலையூற்று வித்தியாலயத்திலய அதிபர் நவாஸ்,

பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளக குழந்தை சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் அமுதியா,

மக்குளூற்று கிராம அபிவிருத்தி சங்க தலைவர் பைசர், ஓய்வு பெற்ற ஆசிரியை சலீமா, ஓய்வு பெற்ற ஆசிரியை நயிமா அயல் பாலர் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள், நலன் விரும்பிகள், கிராமவாசிகள் பலர் கலந்து சிறப்பித்தனர்.







இந்திய வள்ளலார் கருணைக் குழுவின் நிதி அனுசரணையில் அட்டன் சேகரனின் ஏற்பாட்டில் கொட்டக்கலை வீ ஆசிரியர் ஒன்றியத்தினால் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெற்றபோது வீ ஆசிரியர் ஒன்றியத்தின் முக்கியஸ்தர்கள் கலந்துக்கொண்டு உலருணவு பொதிகளை வழங்கினர். (தலவாக்கலை பி.கேதீஸ்)

# மாணவர்க்கு ஆளுமை விருத்தி செயலமர்வு

( காரைதீவு நிருபர் சகா)

மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷனில் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கான பயிற்சி செயலமர்வு, புதுக்குடியிருப்பு விவேகானந்த தொழில்நுட்ப கல்லூரி பயிலுனர்களுக்கு நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில், கல்லடி இராமகிருஷ்ண மிஷன் உதவி மேலாளர் சுவாமி ஸ்ரீமத் நீலமாதவானந்தஜீ மஹராஜ் , மாணவர்கள் மனதை எவ்வாறு தமது கட்டுக்குள் வைத்திருப்பது சம்பந்தமான விடயங்களையும், தியானம் செய்வதற்கான அடிப்படை நுட்பங்களையும் பயிற்சியளித்தார்.

கல்லடி இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சுவாமி ஸ்ரீமத் தக்ஷஜானந்தஜீ மஹராஜ், உடல் வலிமை மற்றும் தன்னம்பிக்கை வளர்த்தல் போன்ற கருத்துக்களையும் மாணவர்கள் தொழில்நுட்பத்துடன் எவ்வாறு ஆன்மீகத்தையும் கடைப்பிடித்து முன்னேற முடியும் என்ற விடயங்களையும் பயிற்சி அளித்தார்.

கொழும்பிலிருந்து வருகைதந்த இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி அக் ஷராத்மானந்தஜீ மஹராஜ் , மனப்பாங்கு மாற்றம், விதியை வெல்லும் வழி, ஆளுமைக்கான திறன்களை வளர்த்துக் கொள்ளுதல் மற்றும் தற்போதய நிலையில் மாணவர்கள் பின்பற்றவேண்டிய வழிமுறைகள் என பல விடயங்களை பயிற்சியளித்தார். இறுதியாக மாணவர்களுக்கான இனிய மதியபோசனத்துடன் சிறப்புற இச் செயலமர்வு நிறைவேறியது.

இராமகிருஷ்ண மிஷன் துறவிகள், சேவகர்கள், தொண்டர்கள், மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



# பாரம்பரிய கதிர்காம பாத யாத்திரை ஆரம்பம்



உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)

கொரோனாதீநுண்மியின் தாக்கம் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக தடைபட்டிருந்த பாரம்பரிய யாழ்ப்பாணம்- கதிர்காமத்திற்கான பாதயாத்திரை இவ் வருடத்தில் (4) சனிக்கிழமை ஆரம்பமாகியது.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து விஷேட பூசை வழிபாடுகளுடன் பாரம்பரிய பாதயாத்திரை காலை ஆரம்பமாகியது.

வடக்கு - கிழக்கு - ஊவா ஆகிய 03 மாகாணங்களையும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ,மொனராகலை ஆகிய ஏழு மாவட்டங்களை இணைக்கும் 52 நாட்கள் 5%2 கி.மீற்றர் தூரம் கொண்ட இலங்கையின் மிக நீண்ட கதிர்காமப் பாதயாத்திரையானது சனிக்கிழமை 04ஆம் திகதி யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகனாலயத்திலிருந்து விசேட பூஜை புனஸ்காரங்களுடன் ஆரம்பமாகியது.

வரலாற்று பிரசித்தி பெற்ற ஸ்ரீ கதிர்காமம் கந்தன்ஆலய ஆடிவேல்விழா பேருற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 28ம் திகதி கொடியேற்றத்துடன்ஆரம்பமாகிறது. 15 தினங்கள் திருவிழா இடம்பெற்று ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைய உள்ளது.

அதனை முன்னிட்டு ஜூலை மாதம் 20 திகதி உகந்தை முருகன் ஆலயத்தில் இருந்து கதிர்காம காட்டுப்பாதை திறக்கபடுகிறது.

உகந்தையில் இருந்து காட்டுக்குள்ளே குமண, குமுக்கன் ஆறு, வெட்டை, உப்பாறு, நாவலடி, வியாளை, வள்ளியம்மன் ஆறு பாலம், கட்டகாமம், வீரச்சோலை வழியாக கதிர்காமத்தை அடைந்து இறையருள் முழுமை பெறும் பயணம்.

மனதுக்கு அமைதி தரும் பயணம். பல்லாயிரம் பேர் வாழ்க்கையில் தெய்வீக மாற்றத்தை முருக பெருமானே நேரடியாக வந்து வழிநடத்தும் பயணம்.

முருகப் பெருமானின் வழித்தடத்தை ஒற்றி, அகத்தியர், புலத்தியர், காசியப்ப முனிவர், கபில முனிவர், போகர், பாபாஜி, கோரக்கர், அருணகிரிநாதர், யோகர் சுவாமிகள் உட்பட பல சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் நடந்து வந்த பாதையில் எமது பாதங்களையும் பதித்து குமனை, யாளை, கட்டகாமம் ஆகிய காடுகளை கடந்து, ஆறு நாட்களாக பாத யாத்திரை சென்று கதிர்காம கந்தனை தரிசிகின்றனர்.

1000 வருட பாரம்பரிய மிக்க இந்த புனித பாத யாத்திரையானது ஆன்மீக பயணம் என்பதையும் தாண்டி வாழ்க்கையில் ஒரு புதிய பரிமானத்திற்கே நம்மை கூட்டி செல்கிறது.

இந்தக் கதிர்காம பாத யாத்திரை, தீராத இன்னல்களையும், சொல்லொணா துயரங்களையும், பாரிய பிரச்சினைகளையும் வேண்டுதல்கள் மூலம் தீர்க்கும் அற்புதமான களமாகும்.

தீராத நோய் நொடிகள் தீர அருள் வேண்டி, குழந்தை வரம் வேண்டி, திருமண வரன் வேண்டி, நிம்மதியான வாழ்க்கை வேண்டி, மன நிம்மதி வேண்டி, கல்வி வேண்டி, தொழில் வேண்டி, பதவி உயர்வு வேண்டி, செல்வம் வேண்டி, வீடு வேண்டி, வெளிநாட்டு பயணம் வேண்டி இப்படி எத்தனையோ வேண்டுதல்களை மனம் உருகி முருகப் பெருமானிடம் கேட்கும் களம் இது.

பக்தர்களின் பலவிதமான நேர்த்திக்கடன்களை நிறைவு செய்யும் பாதை இது.

தனது தீராத நோய் தீர்ந்த மகிழ்ச்சியுடன் வயோதிபர்கள், தனக்கு பல ஆண்டுகளின் பின் பிள்ளை வரம்











கிடைத்த பெருமிதத்தில் கைக்குழந்தையுடன் தாய்மார்கள், தடைப்பட்ட திருமணம் நிறைவேறிய நிலையில் ஆனந்தத்துடன் இளம் தம்பதிகள், குடும்ப பிரச்சினைகள் தீர்ந்த மன நிம்மதியுடன் பெரியவர்கள், மகளைக் கரையேற்றிய பேரானந்தத்துடன் பெற்றோர்கள், பரீட்சையில் சித்தியடைந்த குதூகலத்துடன் மாணவர்கள், வெளிநாட்டுப் பயணம் கைகூடிய நிலையில், தொழில் கிடைத்த உற்சாகத்துடன் இளைஞர்கள் இப்படி எத்தனையோ விடயங்களைத் தாங்கி செல்லும் பாதை இது.

இவை மட்டுமா? ஆன்மீக பயணம், பக்தி வழிபாடு என்பதையும் தாண்டி இன்னும் பல விடயங்கள் இப்பாதயாத்திரையில் உள்ளன.

ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர், படித்தவன், படிக்காதவன், தொழிலாளி, முதலாளி என்ற பேதமின்மை, ஏராளமான புதிய நண்பர்களின் அறிமுகம், ஒன்றாக இருந்து உணவு உண்ணுதல், அனைவருக்கும் பகிர்ந்தளித்து உண்ணுதல், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் மனப்பான்மை, உடல் சுகாதாரம், எளிமை, ஒற்றுமை, கூட்டுப் பிரார்த்தனை, பஜனை வழிபாடு என பல நன்மை பயக்கும் விடயங்களை இந்த பாத யாத்திரை நமக்குக் கொடுக்கிறது.

இவை மட்டுமல்ல! இன்னும் பலவற்றை நாம் பார்த்து, கேட்டு, ரசித்து, உணர்ந்து. அனுபவித்துச் செல்கிறோம். காடு, ஆறு, குளம், களப்பு, வெளி, மலை, சேறு, மணல், தென்றல், கூதல்காற்று, கச்சான்காற்று, மழை, சுட்டெரிக்கும் வெயில், பனி இப்படி இயற்கை நமக்களித்த கோடை இங்கே கொட்டிக் கிடக்கிறது.

அழகிய மலைகள், வெளிகள், காடுகளைப் பார்த்து ரசித்து, காட்டு மூலிகைகளைத் தழுவி வரும் ஆறுகளில் குளித்து, சுத்தமான நல்ல காற்றை சுவாசித்து, மூலிகைகள் நிறைந்த காற்றை உடலில் படச்செய்து, புல் தரைகளிலே, ஆற்று மணலிலே, மரங்களின் கீழே படுத்து உறங்கி, காட்டிலே தேவாமிர்தமாகக் கிடைத்த உணவை அளவாக உண்டு மகிழ்ந்து, பறவைகளின் கீச்சொலிகளைக் கேட்டு, இறைவனின் நாமத்தை எந்நேரமும் உச்சரித்து, இந்த உணர்வுகளை எல்லாம் அனுபவித்து, அசைபோட்டு அப்பப்பா! எத்தனை மனநிறைவான விடயங்கள்.

நாம் வாழும் சூழலில், நகரத்தில் எள்ளளவும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத அத்தனையும் இந்த பாதயாத்திரை மூலம் நமக்குக் கிடைக்கிறது.

பணமும், பதவியும், புகழும், சுகமும் மட்டுமா வாழ்க்கை? அதை விட நாம் பெற வேண்டியவை எத்தனையோ உள்ளன என்பதை உணர்த்தும் யாத்திரை இது.

போலியாக, நிழலாக வாழும் எமக்கு உண்மையை, நிஜத்தைக் காட்டும் இந்தப் பாத யாத்திரையின் பேரானந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் கதிர்காமத்திற்கு ஒரு முறையாவது பாதயாத்திரை செல்ல வேண்டும்.

மொத்தத்தில் ஒரே வார்த்தையில் சொன்னால் முருக பெருமானே நேரடியாக பயணத்தில் அனைவரையும் அழைத்து செல்கிறான். இது மட்டும் சத்தியம்.

# வெவ்வேறு கோணங்களில் ரணிலின் பிரதமர் பதவி பற்றிய கண்ணோட்டம்



ரணில் விக்கிரமசிங்க 1977 இல் இருந்து 2015 வரை மக்களால் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்.2020 தேர்தலில் மட்டும் மக்களால் நிராகரிக்கப்பட்டார். இருந்தும் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் ஆனார். ஒரேயொரு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக இருந்து தற்போது பிரதமர் ஆகிவிட்டார்.இவர் பாராளுமன்றத்தில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர்,பல்வேறு அமைச்சுப் பதவிகள் என்று பலவதவிகளை வகித்து அனுபவம் பெற்றவர். அவ்வாறான ஒருவரின் அனுபவத்தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு,மிகவும் பொருளாதார நெருக்கடியான காலத்தில் பிரதமர் பதவியை ஜனாதிபதி கோத்தபாய வழங்கியுள்ளார்.இந்தப் பதவியானது வெவ்வேறு கோணங்களில் மாறுபட்ட பார்வைக்குள்ளாகி விமர்சிக்கப்பட்டு வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியினரின் பார்வையில் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்கக்



**ஜி.ஶ்ரீநேசன்,**
**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு**

கூடிய சர்வதேச நாடுகளின்,குறிப்பாக மேற்குலக ஜனநாயக நாடுகளின் நம்பிக்கையைப் பெற்ற ஒரே தலைவராக ரணில் காட்டப்படுகின்றார்.இப்படியான பார்வையின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் கட்டியெழுப்புவார் ரணில் என்று அவரது கட்சியினர் எதிர்பார்க்கின்றனர்.

மேற்குலக ஜனநாயக நாடுகள்,இந்தியா,யப்பான் ஆகிய நாடுகளின் பார்வையில் சீனாவின் இலங்கை மீதானகிடுக்குப்பிடியைப்படிப்படியாக கழற்றுவதற்கு தாராண்மைவாத ஜனநாயகவாதியான ரணிலின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும்,அவரது கட்சியினை மேலும் வளர்த்து விட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சஜித் பிரேமதாச தலைமையில் இயங்கும்,பிரதான எதிர்க்கட்சியாக உள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பார்வையில்,

**அவரவர் பார்வையில் எத்தனை அர்த்தங்கள் என்தாகவே ரணிலின் பிரதமர் பதவி அமைந்துள்ளது. ரணிலின் பார்வையில், தனது மாமா ஜெயவர்தனாவினால் ஹீறோ நிலையில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சியைத் தனது காலத்தில் ஸீறோவாக்கி விட்டேன் என்ற குற்றவுணர்வு உண்டு.அதனைப் போக்கி அக்கட்சியை ஓரளவேனும் உருப்பமுத்திவிட வேண்டும் என்பதே அவரது உளவியலாக இருக்க வேண்டும். அதில் ஒருவழி தனது ஆளுமையால் பொருளாதாரத்தை சரிப்படுத்தல் மற்றையவழி சஜித்தின் அணியிலுள்ளவர்களை தம்பக்கமாக ஈர்த்தல் என்பவையாகும். இன்னுமோர்வழி ராஜபக்சக்கவின் இயலாமை கள் தவறுகளை வெளிக்கொணர்ந்து ஐக்கிய தேசியக்கட்சி பக்கமாக தமக்களைக் கவர்வதாகும்.**

தமது கட்சியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களைப் பிரித்தெடுப்பதன் மூலமாக அக்கட்சியினைப் பலவீனப்படுத்தி மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியினைக் கட்டியெழுப்ப வந்த சவாலுக்குரிய பதவியாளராக ரணில் பார்க்கப்படுகிறார்.மேலும், வீழ்ச்சிப் பாதையிலுள்ள ராஜபக்ச அரசாங்கத்தினை தூக்கி நிறுத்த வந்த அவர்களது மீட்பராக அல்லது நண்பராக ரணில் பார்க்கப்படுகின்றார். அதாவது ஐக்கிய மக்கள் சக்தியை விழுத்துவதற்காக ராஜபக்சக்களோடு கைகோர்த்து பிதமர் பதவியைப் பெற்றவராக ரணில் நோக்கப்படுகின்றார்.

அதேவேளை ஜேவிபியினரின் பார்வையில் அதிகாரவர்கக முதலாளித்துவ மேட்டுக்குடி வார்க்கத்தினரின் சேர்க்கையாக ரணில் ராஜபக்சக்களின் பிணைப்பைப் பார்க்கின்றனர்.அதாவது இடதுசாரிகளுக்கு எதிரான கூட்டணியாக ரணில் ராஜபக்ச உறவு அமைந்துள்ளது.

அதே வேளை முஸ்லிம் கட்சிகள், மலையகக் கட்சியினர்,ரணிலின் பிரதமர் பதவியினை ஒரு தற்காலிகமான ஏற்பாடாகவே பார்க்கின்றனர். இந்தக் கரைந்து போகக்கூடிய பதவியினை நம்பி தாமும் நட்டாற்றில் வீழ்ந்து விடக் கூடாது என்று கணிசமான முஸ்லிம் கட்சியினர் நினைக்கிறார்கள். இருந்தாலும் சில முஸ்லிம் உறுப்பினர்கள் எப்படியாவது கபினட்,இராசாங்க அமைச்சர்களாவதற்கு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியுள்ளனர். என்ன விலை கொடுத்தாவது அமைச்சராவது என்பது இவர்களது இலக்காகவுள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் ரணிலின் பதநிலைபற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.ராஜபக்சக்களின் நண்பராக ரணிலைப் பார்கின்றனர்.அதாவது பேரினவாதக்கட்சிகளின் சேர்க்கையாக நோக்குகின்றனர்.

பொதுசனப் பொமுனக் கட்சியினரின் ஒரு பகுதியினர் ரணிலின் பதவியினைத்தாம் தப்பிப் பிழைப்பதற்கான குறுகிய கால ஏற்பாட்டுக்கான நிவாரணியாகப் பார்க்கின்றனர். இன்னும் ஒரு பகுதியினர் குறிப்பாக பசில் தரப்பினர் ரணிலின் அசைவுகளை உன்னிப்பாக அவதானிக்கின்றனர்.21 ஆவது அரபியல் யாப்புத்திருத்தம் மூலமாக இரட்டைக் குடியுரிமையுள்ள பசிலை அகற்றுவதன் மூலம் பொதுசனப் பெரமுனவின் நிறுவுனரை அரசியலில் இருந்து அப்புறப்படுத்தியும், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதன் மூலம் ஜனாதிபதி கோட்டப்பாயவை அதிகாரம் அற்ற நிலைக்கும் கொண்டும் வரப்போகின்றனர் என்று அச்சமடைகின்றனர். இதன் மூலமாக பொதுஜனப் பெரமுனவின் எதிர்காலத்தை ரணில் பலவீனப்படுத்திவிடுவாரோ என்று பீதியடைகின்றனர்.

அதேவேளை இலங்கையில் பலமாகக் காலூன்றியுள்ள சீன அரசும் கூட குழப்பம் அடைந்துள்ளது,அமெரிக்க தலைமையிலான ஜனநாயக நாடுகளின் தந்திரோபாயக் காய்நகர்த்தலாக ரணிலின் பிரதமர் பதவியைப் பார்க்கின்றது சீனா. ரணிலைத் தமது கம்யூனிச சித்தாந்தத்தின் எதிரியாக சீனா கருதுகின்றது.

பொதுவாக மக்கள் பார்வையில் ரணிவின் பதவி என்பது வெறும் அரசியல் நாடகமாகவே பார்க்கப்படுகின்றது.மொத்தத்தில் ரணிலின் பிரதமர் பதவி என்பது வெவ்வேறு பார்வையில் பல்பரிமாணத் தோற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. 21 ஆவது அரசியல் யாப்புத்திருத்தம் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவரப்படும் போது பசில் அணியினரின் நிலைப்பாட்டில்தான் ரணிலின் பிரதமர் பதவியும் தம்பியுள்ளது.

ஏற்கனவே பெண்ணொருவருக்கு பிரதிச் சபாநாயகர் பதவியை வழங்குவதற்கு பிரதமரும் ஜனாதிபதியும் இணக்கம் கண்டபோதும் அதனை பொதுஜனப் பெரமுனக் கட்சியினர் தோற்கடித்து தாம் விரும்பியவரை பிரதி சபாநாயகர் ஆக்கியுள்ளனர். இதுவும் பசிலின் ஆலோசனைப் படி நடைபெற்றதாகவே கூறப்படுகிறது.21 ஆவது திருத்தத்தின் மூலமாக இரட்டைக் குடியுரிமையுள்ள பசில்ராஜபக்ச தனது எதிர்காலக் கனவை இழக்க விரும்ப மாட்டார். ரணிலின் பிரதமர் பதவி பசிலின் இருப்பைத் தகர்ப்பதை பொதுஜனப் பெரமுனவினர் விரும்புவதற்கு வாய்பபு இல்லை.மஹிந்த,நாமல் தரப்பினர் தம்மீதான மக்கள் எதிர்ப்பு அலையினை மறைப்பதற்கான மறப்பதற்கான தற்காலிக அரசியல் திரையாக ரணிலின் பிரதமர் பதவியை நோக்குகின்றனர்.

அவரவர் பார்வையில் எத்தனை அர்த்தங்கள் என்தாகவே ரணிலின் பிரதமர் பதவி அமைந்துள்ளது. ரணிலின் பார்வையில்,தனது மாமா ஜெயவர்தனாவினால் ஹீறோ நிலையில் இருந்த ஐக்கியதேசியக்கட்சியைத் தனது காலத்தில் ஸீறோவாக்கி விட்டேன் என்ற குற்றவுணர்வு உண்டு.அதனைப் போக்கி அக்கட்சியை ஓரளவேனும் உருப்படுத்திவிட வேண்டும் என்பதே அவரது உளவியலாக இருக்க வேண்டும்.அதில் ஒருவழி தனது ஆளுமையால் பொருளாதாரத்தை சரிப்படுத்தல் மற்றையவழி சஜித்தின் அணியிலுள்ளவர்களை தம் பக்கமாக ஈர்த்தல் என்பவையாகும். இன்னுமோர்வழி ராஜபக்சக்கவின் இயலாமைகள் தவறுகளை வெளிக்கொணர்ந்து ஐக்கிய தேசியக்கட்சி பக்கமாக தமக்களைக் கவர்வதாகும்.

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com



## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 20

# மூத்த பல்துறைக் கலைஞர் பத்தக்குட்டி மதிபாலசிங்கம்
# சாதனைக் கலைப் பயணம்

**சமூக வளர்ச்சி காலகட்டங்கள் அனைத்தின் ஊடாகவும் கலை இலக்கியம் வளர்ச்சி பெற்று வந்திருப்பதை வரலாற்றினூடாக காணமுடிகின்றது. ஆரம்பகால மனிதர்களிடையே பிற்காலங்களில் வளர்ச்சி பெற்ற கலைகளைக் காணலாம். வேறு மனிதக் குழுக்களிடையே பல அம்சங்கள் கொண்ட ஆரம்ப கலைக்கூறுகள் உருவாகி வளர்ந்து தற்போது காலக் கண்ணாடியாக திகழ்கிறது. இவ்வாறான பழமை மிக்கதும், பெருமை வாய்ந்ததுமான இக்கலையில் பல்வேறுபட்ட துறைகளில் பல திறமை வாய்ந்த பல கலைஞர்கள் உருவாகி வருகின்றனர்.**

அந்த வகையில், திருக்கோணமலை ஈச்சிலம்பற்றுக் கிராமத்தைப் பிறப்பிடமாகவும், மல்லிகைத்தீவு கிராமத்தை வசிப்பிடமாகக் கொண்டு 1962ம் ஆண்டு பத்தக்குட்டி பாக்கியம் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை ஈச்சிலம்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், உயர் கல்வியினை தி/மூ/ கிளிவெட்டி மகா வித்தியாலயத்திலும் பயின்றவர். ஆசிரியராக நியமனம் பெற்று ஆசிரியராகவும், அதிபராகவும் பல வருடங்கள் ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் கடமையாற்றி தற்போது ஈச்சிலம்பற்றுக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வருகின்றார்.

இலக்கிய உலகில் ஈச்சிலம்பற்று மதிபாலசிங்கம் என அறியப்பட்ட இவர் 1983 தொடக்கம் சிறிது சிறிதாக எழுதத் தொடங்க ஆரம்பித்தார். அதற்கு அவரது வாசிப்புத் திறனும், வானொலி நிகழ்ச்சிகளை தொடர்ந்து கேட்டலும் ஆர்வத்தை தூண்டியது. அதன் நிமித்தம் இவர் எழுதிய 'யார் இவள்' எனும் கவிதை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது இவருக்கு முதல் ஊக்கத்தை வழங்கியதும் தொடர்ச்சியாக இன்று வரை பல்வேறுபட்ட கருப்பொருளைக் கொண்ட கவிதைப் படைப்புகளை எழுதி வருகின்றார். இவைத்தவிர, மெல்லிசைப் பாடல்களை எழுதுவதிலும் கலையார்வம் கொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியுள்ளார் என்பதோடு அற்கான வாய்ப்பினை இலங்கை வானொலியின் தேசிய சேவை ஒலிபரப்பு வழங்கியிருந்தது. இன்றும் இவை ஒலிபரப்பப்பட்டு வருகின்றமையும், தொடர்ச்சியாக இத்துறையிலும் தன்னை அர்ப்பணித்து வருகின்றமையும் சிறப்பான விடயமாகும். இசையும் கதையும், குறுநாடகங்கள், கிராமியச் சித்திரங்கள், கிராமிய வாழ்வியல் தொடர்பான கட்டுரைகள் போன்ற விடயங்களை வானொலிக்காக எழுதியுள்ளார். இவ்வாறாக தனது பிரதேச மட்டத்திலும் பல கலைத்துறைசார் வேலைப்பாடுகளை பிரதேச செயலக கலாசார பேரவையுடன் இணைந்து முன்னெடுத்து வருவது மட்டுமல்லாமல், இளங் கலைஞர்களையும் இணைத்துக் கொண்டு அவர்களுக்கான களத்தை கொடுப்பதற்கான பாதையினையும் வழியமைத்துக் கொடுத்து வருகின்றார் என்பது பெருமைக்குரிய விடயமாகும். மேலும், இவரது கலையின் தாகத்துக்கு அடையாளமாக 'வெருகலம்பதி வேலவன் கீதங்கள்' எனும் பத்துப் பாடல்கள் அடங்கிய இறுவட்டு வெளியிட்டமை உலகளாவிய ரீதியில் பெரும் வரவேற்பை பெற்றது பதிவுக்குரிய விடயமாகும்.

இவ்வாறாக 35 வருடங்களுக்கு மேலாக பல்துறைகளிலும் இன்று வரை சிறப்பாக தன்னை அர்ப்பணித்து கலைச் சேவையாற்றி வருபவரான கவிச்சுடர், கவி அருவி, தியாகச் செம்மல் பத்தக்குட்டி மதிபாலசிங்கம் கலைஞர் சுபீட்சம் வாராந்தப் பத்திரிகையின் 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை'என்ற பகுதிக்கு வழங்கிய செவ்வி காணல்.

**? கலைத்துறையில் ஏற்பட்ட ஆர்வமும், அதனூடான உங்களது பயணம், முதல் வாய்ப்பு பற்றியும்?**

கலைத்துறைக்குள் நான் பயணிப்பதற்கு எனது வாசிப்பும், வானொலி நிகழ்ச்சிகளை ( குறிப்பாக இலக்கிய நிகழ்ச்சிகள்) தொடர்ந்து கேட்டதாலும் கலை ஆர்வம் எனக்குள் ஏற்பட்டது. குறிப்பாக 'வாலிப வட்டம், நாளைய சந்ததி, ஒலி மஞ்சரி, சிறுவர் மலர், இசையும் கதையும், பாவளம் போன்ற இன்னும் பலவற்றைக் குறிப்பிடலாம். அத்தோடு அரை மணி நேர வானொலி நாடகங்கள் இவைப் போன்ற இரசணை மிகுந்த நிகழ்ச்சிகள் என்னை ஈர்த்திருந்தமையினால் தான் எனக்கு பாரிய ஆர்வத்தை ஏற்படுத்தியது எனலாம். அத்தோடு முதன்முதலாக வாலிப வட்டம் எனும் நிகழ்ச்சிக்கு 'யார் இவள்' எனும் தலைப்பில் ஒரு கவிதையை எழுதினேன். அது வானொலியில் ஒலிபரப்பப்பட்டதனால் எனது ஊக்கம் தொடர்ந்து சென்றது எனலாம்.

**? இதுவரையில் எவ்வாறான வகையிலமைந்த கவிதைத் தொகுதிகளை எழுதியுள்ளீர்கள்?**

எனது கவிதைகள் அதிகமாக காதல், இயற்கை எழில், சமூக சீர்கேடுகள் இலக்கிய நயத்தோடு கூடிய கவிதைகளை நான் எழுதியுள்ளேன். இதில் இயற்கையின்



அழகு , சமூகம் தொடர்பான படைப்புக்களே எனக்கு பல வாய்ப்புகளை தந்திருந்தது.

**? இதுவரையில், நீங்கள் எழுதிய மெல்லிசைப் பாடல்கள் பற்றியும், அதன் மூலமான மறக்கமுடியாத தருணம் ஒன்றைப் பற்றியும்?**

கவிதைகள் ஒருபுறம் இருந்தாலும் நான் அதிகம் ஈடுபாடு காட்டியது மெல்லிசைப் பாடல்களில் தான். இலங்கை வானொலியில் குறிப்பாக தேசிய சேவை ஒலிபரப்பில் ஈழத்துப் பாடல்கள் என்ற நிகழ்ச்சியில் பின்பு மெல்லிசை பாடல்கள் என்ற பெயரோடு ஒலிபரப்பானது.இதில் எமது நாட்டின் பல கவிஞர்கள் பாடல்களை எழுதி வந்தார்கள். இதில் எமது நாட்டின் பல கவிஞர்கள் பாடல்களை எழுதி வந்தார்கள். அவ்வகையான எமது நாட்டின் மூத்த கவிஞர்களது கற்பனையில் உருவான இனிய பாடல்களை இன்றும் கேட்க முடிவது எமக்குப் பெருமையே. அந்த வகையில் தான் நானும் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களை எழுதி இருந்தேன். அதில் 25 தொடக்கம் 30 பாடல்கள் வரை இசையமைத்துப் பாடப்பட்டு ஒலிபரப்பாகி வருகின்றது. 1995ஆம் ஆண்டில் இலங்கை வானொலி சேவையில் 'சந்தன மேடை' எனும் மெல்லிசை நிகழ்ச்சியை ஆரம்பித்தனர். 1999 வரையான காலத்தில் என்னால் எழுதப்பட்ட பத்துப் பாடல்கள் இசை யமைத்து பாடப்பட்டு இன்றும் அவை தேசிய சேவை வர்த்தக சேவைகளில் ஒலிபரப்பாகி வருகின்றமையை சிறப்பாகக் குறிப்பிடலாம். இவ்வாறு எழுதிய பாடல்களில் எனது அன்னைக்கு சமர்ப்பணமாக ஒரு பாடலை எழுதி அனுப்பிவிட்டு அந் நிகழ்ச்சி தயாரிப்பாளரிடம் கடிதம் மூலம் இப் பாடல் தொடர்பாக கூறியிருந்தேன். எந்த மறுப்பும் இன்றி அந்தப் பாடலை இசை யமைத்து , பாடவைத்து எனக்கும் பெருமை சேர்த்தார்.'அன்பே ஆருயிரே அம்மா என்பேனே....' என்ற பாடல்தான் அது. இப்பொழுதும் வானொலியில் ஒலிபரப்பினால் எனது அன்னையின் ஞாபகம் ஏற்பட்டு நெஞ்சத்தைப் பிளக்கிறது. இதுவே என்னால் மறக்க முடியாத தருணம் ஆகும்.

**? உங்களது ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் கலைகளுக்கான அடையாளமும், அங்கீகாரமும் எவ்வாறு உள்ளது?**

எமது ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் கலைகளுக்கான அடையாளமும், அங்கீகாரமும் காணப்படவே செய்கின்றது. தனித்துவம் வாய்ந்த பூர்வீகமான கிராமிய மணத்தோடு கூடிய மனித வாழ்வியலை கொண்ட எமது மண்ணில் சிறப்பான அடையாளமாக கிராமியக் கலைகள் காணப்படவே செய்கின்றது. பாரம்பரியமாகப் பேணப்பட்டு வரும் பல கலைத்துவத் தன்மை நிறைந்த சில கலையம்சங்கள் மாறிவரும் உலகுக்கேற்ப மருவி வந்தாலும் இன்னும் பல புத்தெழுச்சி பெற்றே வருகின்றது. பண்பாட்டு கலைகளுக்கான அங்கீகாரமும் தொடரத்தான் செய்கிறது. மக்களின்



அங்கீகாரம் இருப்பதனால் தான் பல்வேறு பண்பாட்டுக் கலைகள் இன்றும் உயிர் வாழ்கிறது எனலாம். குறிப்பாக ஒப்பாரி, நாட்டுக்கூத்து, வசந்தன் கூத்து , கும்மி, கோலாட்டம் போன்றவை இன்றும் உயிரோட்டமாக உள்ளது.

**? எவ்வாறான கருப்பொருளினை மையமாகக் கொண்டு மெல்லிசைப் பாடல்களை எழுதி வருகிறீர்கள்?**

நான் எழுதிய மெல்லிசைப் பாடல்கள் இயற்கை வர்ணனை, மனித வாழ்வியல் கோலங்கள், காதல் , விவசாயம் சார்ந்தவற்றை கருப்பொருளாகக் கொண்டே எழுதியுள்ளேன். இவற்றைவிட ஆன்மீகப் பாடல்கள் போன்றனவும் என்னால் எழுதப்பட்டுள்ளது.

**? உங்களது பல்துறைக் கலைக்கான அங்கீகாரம் எவ்வாறு கிடைக்கப் பெற்றது?**

எனது ஆக்க முயற்சிகளில் கவிதையோடு மட்டும் நிற்காமல் பல வடிவங்களில் எனது எண்ணத்தை வெளிக் காட்டியுள்ளேன். குறிப்பாக கவிதை ஒரு புறமிருந்தாலும் இசையும் கதையும், குறுநாடகங்கள், கிராமிய சித்திரங்கள் போன்ற வானொலி நிகழ்ச்சிகளோடு கிராமிய வாழ்வியல் தொடர்பான கட்டுரைகளும் வானொலிக்காக எழுதியுள்ளேன். அத்தோடு பாடசாலை மாணவர்கள் ஊடாக மறைந்து வரும் நாடகக் கூத்துக்களையும் நெறியாழ்கை செய்து உள்ளேன். ஒரு துறையை மட்டும் கொள்ளாது நான் சொல்ல நினைக்கும் கருத்துகளை பொருத்தமான வடிவங்களில் வெளிக் கொண்டு வந்தேன் என்பதைக் கூற விரும்புகின்றேன்.

**? நீங்கள் வாழும் பிரதேசத்தில் தனித்துவக் கலைகளாக மிளிர்ந்து கொண்டிருப்பவை பற்றியும், அவற்றுக்கான சவால்கள் குறித்தும்?**

எமது பிரதேசத்தில் தனித்துவமாக மிளிரும் கலைகளாக பலவற்றைக் குறிப்பிடலாம். குறிப்பாக இங்கு நாட்டுக் கூத்துகளை கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து போன்றவை தனித்துவக் கலைகளாக பாதுகாத்து வரப்படுகின்றது. இன்று பல்கிப் பெருகிய பொழுது போக்குச் சாதனங்கள் காரணமாக அவற்றின் தாக்கம் இவர்களிடம் காணப்படுகின்றது. இவ்வாறான கிராமியக் கலைகளை பின்பற்றுவதற்கான வாய்ப்புகள் சற்று குறைந்து காணப்படுகின்றது. கல்வி வளர்ச்சி காரணமாக இளம் பருவத்தினரிடம் காணப்படும் மனமாற்றமும், நவீனப் போக்குகளும் இக் கலை வளர்ச்சியையும் பாதித்தேயுள்ளது. ஆனாலும் தமது பாரம்பரிய அடையாளமாக காணப்படும் இவ்வகையான கலைகளை பாதுகாக்க வேண்டும் என்ற தார்மீக உணர்வும் இவர்களிடம் காணப்படுவது குறிப்பிடத் தக்கதாகும். இதுவும் ஒரு சவாலாகவே உள்ளது. மற்றும் இவ்வகையான கிராமியக் கலைகளை பயிற்சி அளிப்பதற்கான அண்ணாவிமார்களும் இன்னோரன்ன திறமை கொண்டோரும் குறைந்து வருகின்றமையும் சவாலாகும். மேலும் பாரம்பரிய கலை மீது உள்ள இரசணை உணர்வு குறைந்தமையும், இக்கலைகள் நவீனமயப்படுத்தப்படாமையும் பாரிய சவாலாக உள்ளது எனக் குறிப்பிடலாம்.

**? தாங்கள் வாழும் பிரதேசத்தில் உங்களது கலைக்கான வரவேற்பு எவ்வாறு உள்ளது?**

எமது பிரதேசத்தில் கலைஞர் குழு சிறப்பாக இயங்கி வருகின்றது. அது மட்டுமல்லாமல் தற்போது முகப் புத்தகத்தில் ஊடாக கவிதை குழுமங்கள் நடாத்தும் தகுதி வாய்ந்த போட்டிகளில் பங்கு கொள்ளும் இளம் கலைஞர்கள் தமது திறமைகளைக் காட்டி வருகின்றனர். அத்தோடு ஓரளவு திறமையாளர்களைக் கண்டு அவர்களுக்கான துறை சார் ஆலோசனைகளை வழங்குவதன் ஊடாக இலக்கிய முயற்சிகளில் விருப்புத்தன்மையை ஏற்படுத்தி வருகின்றோம். இதனால் எமது படைப்புக்களையும், வெளியீடுகளையும் வாசிப்பதன் ஊடாக எமக்கான சமூக அங்கீகாரம் உள்ளதை உணர முடிகின்றது.

**? கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வெற்றிகள், விருதுகள் குறித்து?**

இதுவரை கலைத்துறையில் நான் ஈடுபட்ட காரணத்தினால் பல விருதுகளையும், சான்றிதழ்களையும், பட்டங்களையும் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. குறித்த பிரதேச செயலக மட்டத்தில் குறிப்பிடத்தக்க சான்றிதழ்களையும், விருதுகளையும் பெற்றதோடு மாவட்ட மட்டத்திலும் வெற்றிச் சான்றிதழ்,

மிகுதி 10 ஆம் பக்கம் பார்க்க...






தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 20

# மூத்த பல்துறைக் கலைஞர் பத்தக்குட்டி மதிபாலசிங்கம்

# சாதனைக் கலைப் பயணம்



விருதுகள் போன்றவற்றோடு இந்திய கவிதை குழுமங்கள் பங்குகொண்டு 1800க்கும் மேற்பட்ட வெற்றிச் சான்றிதழ்களையும், கவிச்சுடர், கவிக் கலைஞர், தமிழ்ச் சாரல், சாரல் கவிஞர் , கவிக் கடல் , கவித் தடாகம் இவற்றோடும் மலேசிய வலையுகத் எழுத்தாளர் ஒன்றியத்தால் கவி அருவி பட்டமும் கிடைத்தது. இந்தியாவின் நேர்படப் பேசு மாத இதழ் நிறுவனம் நடாத்தும் உலகளாவிய கவிதைப் போட்டியில் நடுவர் பணியாற்றி வருகின்றமைக்காக 2022ல் தியாகச் செம்மல் என்ற சிறப்பான விருதினை வழங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**? இதுவரையில் ஏதும் ஆக்கப் படைப்புகள் வெளியிட்டிருப்பின் அது குறித்தும், வருங் காலத்தில் வெளியிட நினைப்பவை பற்றியும்?**

ஆம். நான்'வெருகலம்பதி வேலவன் கீதங்கள்' என்னும் பத்து பாடல்கள் அடங்கிய இறுவட்டு ஒன்றை வெளியிட்டு இருந்தேன். அது உலகளா



விய ரீதியில் பெரும் வரவேற்பை பெற்றது. நூல்கள் வெளியிடவில்லை. அதற்கு பல காரணங்கள் இருந்தாலும் எதிர்காலத்தில் இரண்டு ஆலயங்கள் தொடர்பான பாடல் இறுவட்டுக்களையும், கிடப்பில் உள்ள சில கவிதைத் தொகுப்புகளையும் வெளியிட உத்தேசித்துள்ளேன்.

**? தற்சமையம் எவ்வாறான கலைச்சேவையை ஆற்றி வருகிறீர்கள்?**

தற்பொழுது நான் ஓயவில்லை. இலங்கை வானொலியில் ஒலி மஞ்சரி , கவிதை கலசம் போன்ற நிகழ்ச்சிகளுக்கும், சக்தி FM இல் ஒலி பரப்பாகும் நிலாச்சோறு நிகழ்ச்சியிலும், கவிச் சமர் நிகழ்ச்சியிலும் நேரடியாக பங்கு கொண்டு வருவது மகிழ்ச்சி. அது மட்டுமல்லாமல் முகநூல் பக்கத்தில் கவிதை குழுமங்கள் நடாத்தும் போட்டிகளில் பங்கு கொண்டு வருகின்றேன். அத்தோடு கவிதை போட்டிக்கான நடுவராகவும் பல வருடங்களாக கடமையாற்றி வருகின்றேன். மேலும் எமது பிரதேசத்தில் மறைந்து வரும் பண்பாட்டுக் கலைகளை வளர்க்கும் முகமாக பிரதேச செயலக கலாசார பேரவையுடன் இணைந்து பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றேன். பாரம்பரிய சடங்கு முறைகளில் (வதனமார் சடங்கு) வன்னி தம்பிரான் வழிபாடு போன்றவற்றை மீண்டும் செயற்பாட்டுக்குக் கொண்டுவர இன்றைய இளைஞர்களையும் இணைத்து முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். விவசாயத்துறையில் மறைந்து போன பாரம்பரியங்கள் எனும் தலைப்பில் குறும் படம் தயாரித்து வெளியீடு செய்தமை. இது கலாசார சபையுடன் இணைந்து செயற்படுத்தினோம். மற்றும் இன்றைய இளைஞர்கள் இலக்கியத் துறையில் இருந்து விடுபட்டு செல்வதை நம்மால் உணரமுடிகிறது. இது இப் பிரதேசத்திலும் தொடரத்தான் செய்கின்றது. இதற்கோர் தீர்வாக படைப்பாற்றலை வளர்க்கும் நோக்கோடு பாடசாலைகளில் தரம் 11, 12, 13களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான எழுத்தாக்கம் தொடர்பான பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

**? ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் மூத்த கலைஞர்களுக்கான அங்கீகாரமும், இளங்கலைஞர்களுக்கான அடையாளமும் எவ்வாறு உள்ளது?**

எமது பிரதேசத்தில் மூத்த கலைஞர்கள் அவ்வப்போது கௌரவிக்கப்பட்டாலும் விகிதாசாரத்தில் குறைவு என்றே கூற வேண்டும். ஆனால் கலைத்துவம் கொண்டவர்கள் சமூக அங்கீகாரத்துடன் வாழ்வதையும் காணமுடிகிறது. மரபு வழியாக கலைஞர்களை உருவாக்கம் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றது. கவிதைத் துறை, சினிமாத்துறை , நாட்டு வைத்திய கலை, காவியம் பாடும் கலை போன்ற இளைஞர்களின் பங்களிப்போடு இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதை உணர முடிகின்றது.

**? திருகோணமலை மாவட்டத்தில் கலைகளின் தேடலும், கலைஞர்களுக்கான வாய்ப்பும் எவ்வாறு உள்ளது?**

திருமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை நகரப்பகுதியில் ஓரளவு நடைபெற்றாலும் கிராமப் பகுதிகளில் காணப்படும் கலைஞர்கள் கண்டுகொள்ளப் படாமல் இருப்பது வேதனையே! பாரம்பரிய கலைகளின் பிறப்பிடமும், வளர்ப்பிடமும் கிராமம் என்பதை பலர் மறந்து விட்டார்கள். அதிக திறமை வாய்ந்த எத்தனையோ மூத்த, இளைய கலைஞர்கள் வெளித் தெரியாமல் உள்ளனர். மாவட்ட ரீதியாக உள்ள பல கலைஞர்கள் இன்னும் இனங்காணப்பட முடியாமல் உள்ளனர். அழிந்துவரும் நாட்டுக் கூத்துக் கலைஞர்களைப் பாருங்கள். வறுமை காரணமாக அத் துறைகளை வளர்ப்பதற்கு எத்தணிப்பதற்கு குறைவாகவே உள்ளது. இவர்களுக்கான வாய்ப்பை வழங்குவதற்கு இங்கு யாரும் முன்வருவது இல்லை. எனவே நகர்ப்புறம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலுள்ள கலைஞர்கள், படைப்பாளிகளின் விபரங்களை ஆவணப்படுத்த வேண்டியது முக்கியம் என்பதே எனது கருத்து.

**? பாரம்பரிய கலைகள் தற்சமையம் நவீனமயமாக்கப்பட்ட சமூகத்தின் போக்கில் மருவியடைந்து செல்லும் நிலை காணப்படுகிறது. இது குறித்து?**

இன்று நவீனத்துவம் என்று சொல்லி நாம் ஒவ்வொருவரும் நமது பண்பாட்டையும், வாழ்வியல் நடைமுறைகளையும் இழந்து வருகின்றமை வேதனையே! இதனால் நமது தனித்துவமான, பாரம்பரியமான பண்பாட்டு நடைமுறைகள் நாளை இல்லாமல் போனால் நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை எனலாம். பொதுவாக எமது தமிழரின் பண்பாட்டு கலைகள் என்பது இன்று அழிந்து விட்டது என்றே கூறல் வேண்டும். இதற்கு நவீன பொழுதுபோக்கு சாதனங்களின் வருகையே சமூகத்தை முற்றுமுழுதாக பாதித்துள்ளது எனலாம். மற்றும் எமது பாரம்பரிய கலைகளை வளர்க்க மூத்த கலைஞர்களின் இயலாமை காரணமாக சிறப்புமிகு எமது கலைகளை நவீன முறைக்குள் கொண்டுவர முடியாமல் போயுள்ளது. குறிப்பாக நாட்டுக் கூத்தை எடுத்துக் கொண்டால் அது நாள் கணக்காக ஆடப்பட்டது. இவ்வாறு நீண்ட ஆற்



றுகைகள் தற்காலத்திற்கு பொருத்தமற்றதாகும். இவைகளை அரை அல்லது ஒரு மணி நேரமாக தற்காலத்தில் இரசிக்கக் கூடியவாறு மாற்ற வேண்டிய தேவை உள்ளது. இவ்வாறு நேரக் குறைப்பு செய்யப்படுமாக இருந்தால் அதன் சுவையும், தனித்துவம் இல்லாமல் போகின்றது. ஆனால் தற்கால இரசணைக்கேற்ப மாற்றி அமைக்க வேண்டிய தேவையில் உள்ளமை குறிப்பிடலாம். மேலும் தமிழரிடம் காணப்பட்ட விளையாட்டுக் கலையும் சிறப்பானவை ஆகும். அதாவது கிளித்தட்டு, கிட்டிப் புள்ளும், பசுவும் புலியும் போன்றவை இன்றும் கிராமங்களில் விளையாடி மகிழ்வதைப் காணலாம். இவையும் மாற்பரும் உலகில் நவீன விளையாட்டுக்களின் வருகை இத்தகைய விளையாட்டுகளையும் மறக்கச் செய்துவிட்டது. ஆகவே மக்களின் மனமாற்றம் , இரசணை மாற்றம் , பழமையில் நாட்டமின்மை போன்ற காரணங்களால் எமது பண்பாட்டு கலைகள் மறைந்து வருகின்றது என்றே கூறல் வேண்டும்.

**? நிறைவாக, மூத்த கலைஞரான உங்களது அனுபவத்தினூடாக சாதிக்க நினைக்கும் இளந் தலைமுறையினருக்கு கூற விரும்புவது?**

இன்றைய இளம் தலைமுறையினர் சாதாரண மானவர்கள் அல்ல. அறிவுத் திறன் மனப்பாங்கு ரீதியாக வளர்ச்சியுற்று காணப்படுகின்றனர். சாதனைக்குரிய அணிகலன் அத்தனையும் கொண்டே விளங்குகின்றனர். நீங்கள் வாழத் துடிக்கிறவர்களாக வாழ்ந்து பாருங்கள். சாதிக்கப் போகிறீர்களா? நல்வற்றை தேடுங்கள் நிச்சயம் வெற்றியே! தற்பொழுது நமது இளம் தலைமுறையினரிடம் தேடலுக்கான களம் இருந்தும் தேடுவதில்லை. வாசிப்பு என்பது இல்லாமல் போயுள்ளது. வாசிப்பதனால் தான் மாறிவரும் உலகின் சவால்களை நம்மால் வெற்றிக் கொள்ள முடியும். கவிதை எழுதப் போகிறீர்களா? சிறந்த கவிதை நூல்களைப் முதலில் படியுங்கள். இவ்வாறு இலக்கிய உலகத்தை நீங்கள் நுகர விருப்பம் கொண்டால் நல்ல இலக்கியங்களை நாம் சமைத்து விடலாம். நாளை உலகமே உங்கள் கைகளில் தான் ஆகவே முயற்சியுங்கள். தடைகளை தாண்டுங்கள் வெற்றி உங்கள் கைகளில் தான்.

**பல்துறைக் கலைஞரான இவர் மென்மேலும் கலைத் துறையில் இன்னும் பல படைப்புக்களைப் படைத்து உலகளவில் கலைச்சேவை ஆற்றி விருதுகளையும், பாராட்டுகளையும் பெற்று தேகாரோக்கியத்துடன் இருப்பதற்கு பிரார்த்திப்பதோடு இப்பணித் தொடர மனதார வாழ்த்துகின்றேன்.**

**தொடரும்....**
**கலைஞர்களுக்கான**
**தேடலின் பயணத்தோடு**